பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kālaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 தை 24 சனிக்கிழமை 08.02.2020 கதிர் 94

### இனி இது ரகசியம் அல்ல!

ஒவ்வொரு நாளும் அரசியல் சமாச்சாரங்களை இப்பத்தியில் வாசித்து வாசகர்களுக்குத் திகட்டியிருக்கும். அதனால் இன்று இரண்டு வழக்குகள் விடயத்தைப் பிரஸ்தாபிக்கலாம் என நினைக்கிறேன்.

முதலாவது வழக்கு நேற்று முன்தினம் பக்கம் 02 »

# இலங்கையின் ஜெனிவாவுக்கான தூதரை ஏற்க சுவிஸ் மறுக்கலாம்

## படுகொலைக் குழுவின் சூத்திரதாரியாம் அவர்

கொழும்பு, பெப்ரவரி.08

ஜெனீவாவுக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டிருக்கும் சி.ஏ.சந்திரப்பிரேமவை அப்பதவியில் ஏற்பதற்கு சுவிட்ஸாலாந்து மறுக்கலாம் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

எண்பதுகளின் கடைசியில் தென்னிலங்கையில் இடம்பெற்ற வன்முறைகளின் போது மனித உரிமைகள் சட்டத்தரணிகள், ஊடகவியலாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் உட்பட நூற்றுக் கணக்கானோரின் படுகொலைகளுக்குக் காரணமான – இராணுவ ஆதரவு இரகசிய அணியான – 'மரண தண்டனைக் குழுவில்' அங்கம் வகித்த சூத்திரதாரி அவர் என்று கூறப்படுவதை அடுத்தே இந்த நிலைமை. பக்கம் 03 »



## பல்கலை பகிடிவதை விசாரணை குறித்து அறிக்கை கோரியது மனித உரிமைக் குழு

யாழ்ப்பாணம்,பெப்.08

யாழ். பல்கலைக்கழகக் கிளிநொச்சித் தொழில்நுட்பப் பீடத்தில் பகிடிவதைகள், பாலியல் துன்புறுத்தல்கள் இடம்பெற்றன எனக் கூறப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் அறிக்கை கோரியுள்ளது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.

இது தொடர்பில் பல்கலைக்கழக பக்கம் 03 »

## வலி. வடக்கில் மக்களின் காணிகளை விடுவித்து மீள்குடியேற வசதிகளையும் வழங்க வேண்டும்!

### அரசிடம் கோருகின்றது மீள்குடியேற்றக் குழு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம்,பெப்.08

வலிகாமம் வடக்கிலிருந்த இடம்பெயர்ந்து நீண்ட காலமாக முகாம்களிலுள்ள மக்களின் காணிகளை விடுவித்து அவர்கள் மீள்குடியமர்வதற்குரிய அனைத்து வசதிகளையும் அரசு ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமெனக் கோரியுள்ள வலி. வடக்கு மீள்குடியேற்றக் குழுவின் தலைவர் எஸ்.சஜீவன், மீள்குடியமர மக்களுக்கு ஆர்வம் இல்லை என்ற இராணுவத் தளபதியின் கருத்தையும் நிராகரித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

போர் காரணமாக வலிகாமம் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தற்போதும் முகாம்களிலும் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர். இராணுவத்தினர் ஆக்கிரமித்து வைத்துள்ள அந்த மக்களின் காணிகளை விடுவிக்கவேண்டுமென பல்வேறு போராட்டங்கள் பக்கம் 03 »

## பட்டதாரி பயிலுநர்களுக்கு விண்ணப்பத் திகதி நீடிப்பு

கொழும்பு,பெப்.08

தொழில் வாய்ப்பற்ற பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்துக்கான விண்ணப்பங்கள் பெப்ரவரி 20 வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்று மாலை அனுப்பி வைத்த செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:– பக்கம் 03 »

## மொட்டில் மைத்திரிபாலவை போட்டியிட அனுமதியோம்!

### கூறுகிறார் ரொஷான் ரணசிங்க

கொழும்பு, பெப். 08

பொதுத் தேர்தலில் பொலனறுவை மாவட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை மொட்டுச் சின்னத்தில் போட்டியிட இடமளிக்கப்போவதில்லை எனவும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைத் தனித்துப் போட்டியிடச் செய்யுமாறு கோருவதாகவும் ராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பக்கம் 03 »

## 'ராகிங்' குற்றச்சாட்டு குறித்து மூன்று முக்கிய தீர்மானங்கள்

### பல்கலை அதிகாரிகள் குழு எடுத்தது

யாழ்ப்பாணம்,பெப்.08

யாழ்.பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் மோசமாகப் பகிடிவதை இடம்பெறுகின்றமை மற்றும் தொலைபேசி மூலமான பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்பாக எழுந்த குற்றச்சாட்டுக்களையடுத்து பல்கலைக்கழக மாணவர்களின் ஒழுக்கத்துடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குழு முக்கிய தீர்மானங்களை எடுத்துள்ளது.

யாழ்.பல்கலைக்கழக தகுதிவாய்ந்த அதிகாரி பேராசிரியர் க.கந்தசாமி தலைமையில் பக்கம் 03 »

## ஐக்கிய தேசியக் கட்சியின் சிலர் கோட்டாபய பக்கம்!

### பொன்சேகா குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 08

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் சிலர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் இணைந்து பயணிக்க முடியும் என்று கூறுகின்றனர். இந்த விடயம் கவலையளிக்கின்றது. அவ்வாறு இணைந்து பயணிக்க வேண்டுமாயின் ஐ.தே.கவில் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. இவ்வாறு கூறிக்கொள் பக்கம் 03 »

## மன்னாரில் 50 வீடுகளை அமைப்பதற்கு அடிக்கல்




மன்னார், பெப். 08

மன்னார், முசலிப் பிரதேச செயலாளர் பிரிவின் முள்ளிக்குளம் கிராமத்தில் கடற்படையினரின் கட்டுப்பாட்டின் கீழிருந்து விடுவிக்கப்பட்ட காணியில் 50 வீடுகள் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இடம்பெற்றது.

ஜேர்மனி நாட்டின் உயர் மறைமாவட்டத்தின் நிதி உதவியுடன், கறிற்றாஸ்செடேக் அமைப்பினூடாக இந்த வீட்டுத் திட்டத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. பக்கம் 03 »

## மஹிந்தவை வரவேற்பதற்கு மோடியின் அலங்காரங்கள்!



புதுடில்லி, பெப்.08

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உத்தியோகபூர்வப் பயணமாக நேற்றுப் பிற்பகல் இந்தியா சென்றடைந்தார். அவரை வரவேற்கும் விதமாக புதுடில்லியில் மஹிந்தவின் படங்களுடன் கூடிய பதாதைகளும் இலங்கைக் கொடிகளும் கட்டப்பட்டிருந்தன.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இந்தியப் பிரதமர் மோடிக்கும் இடையிலான சந்திப்பு இன்று புதுடில்லியில் இடம்பெறவுள்ளது. (ஐ)

காலைக்கதிர் Kalaikathir


# ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை நேற்று நேரில் தேடிச் சென்று சந்தித்த ஜனாதிபதி

## முக்கிய உறுதிமொழியும் வழங்கினார்



நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த டெங்கு ஒழிப்பு திட்ட ஊழியர்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேரில் சென்று சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

ஜனாதிபதி செயலக முன்றிலில் ஆர்ப்பாட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் அவர்களை ஜனாதிபதி சந்தித்துள்ளார்.

இதன்போது ஒரு லட்சம் வேலைவாய்ப்புகள் திட்டத்தின் கீழ் அவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குவதாக ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

போராட்டங்கள் காரணமாக ஏற்படும் வாகன நெரிசல் மற்றும் மக்களுக்கு இடையூறு ஏற்படும் செயற்பாடுகளை நிறுத்தும் முகமாகவே ஜனாதிபதி செயலக முன்றிலில் ஆர்ப்பாட்டத்திற்காக இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் முன்னர் ஜனாதிபதி செயலக முன்றிலுக்கு வருகை தரும் ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸாரினால் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

ஆனால் தற்போது எந்தவொரு தடையுமின்றி அவ்விடத்திற்கு அவர்கள் வருகை தந்து, போராட்டத்தில் ஈடுபடக்கூடிய புதிய தொரு சூழலை அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையிலேயே நேற்றைய தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த டெங்கு ஒழிப்பு திட்ட ஊழியர்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தாமாகவே நேரில் தேடிச் சென்று சந்திந்துக் கலந்துரையாடியுள்ளார்.

## யாழ். ஸ்வயம் சேவக்கின் இந்து இளைஞர் மாநாடு

யாழ்ப்பாணம், இந்து ஸ்வயம் சேவாக் சங்கம் நடத்தும் தேசிய இந்து இளைஞர் மாநாடு இன்றும் நாளையும் நடைபெறுகின்றது.

இந்த மாநாட்டின் நிறைவுநாள் நிகழ்ச்சி நாளை ஞாயிறு மாலை 4 மணி முதல் 5.30 மணி வரை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், சின்மயாமிஷனின் சுவாமி சிதாகாசானந்தா ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.

முன்னாள் யாழ். இந்துக் கல்லூரி அதிபரும் திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச் சபையின் இணைப் பொருளாளருமான ஐ.தயானந்தராஜா முன்னிலையில் தெல்லிப்பளை துர்க்கா தேவஸ்தானத் தலைவர் ஆறு திருமுருகன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறும்.

சிறப்பு விருந்தினராக இந்தியாவின் யாழ்.துணைத்தூதுவர் ச.பாலச்சந்திரன் கலந்து கொள்வார்.

# துணைவேந்தர் பதவிக்கான விண்ணப்பங்களை ரத்துச் செய்கின்றது மானியங்கள் ஆணைக்குழு

பல்கலைக்கழகங்களுக்கு துணைவேந்தரை தெரிவு செய்யும் வகையில் இதுவரை முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன என அறிவித்துள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, புதிய பொறிமுறையின் கீழ் துணைவேந்தர் தெரிவுக்கானசெயன்முறையை நடைமுறைப்படுத்துமாறு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

நேற்று முன் தினம் வியாழக்கிழமை நடைபெற்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கூட்டத்தின் தீர்மானத்தின் அடிப்படையிலேயே இந்தச் சுற்றறிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் எண்ணக்கருவுக்கு அமைய இந்த மாற்றம் செய்யப்படுவதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழகங்களில் காணப்படும் துணைவேந்தர் வெற்றிடத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு, கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் அடிப்படையில் விண்ணப்பதாரிகளைசிறப்புப்பொறிமுறை ஒன்றின் ஊடாக அதி உச்சத்திறனும் அனுபவமும் உள்ளவர்களைப் போட்டியாளர்களாகத் தெரிவு செய்யவேண்டும்.

சிறப்புப் பொறிமுறையில் தனியார் துறையில் நீண்டகால அனுபவம் உள்ள முகாமைத்துவ அதிகாரி, இலங்கை நிர்வாக சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர் மற்றும் சேவையில் உள்ளவர் நியமிக்கப்படவேண்டும்.

இந்த சிறப்புப் பொறிமுறை துணைவேந்தருக்கு விண்ணப்பித்தவர்களை அழைத்து நேர்முகத் தேர்வுக்கு உட்படுத்தவேண்டும். அவ்வாறு நடத்தப்படும் நேர்முகத் தேர்வின் அடிப்படையில் அதி உச்சத்திறனும் அனுபவமும் உள்ளவர்களின் பெயர்களைச் சிறப்புப் பொறிமுறை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு பரிந்துரை செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், சிறப்புப் பொறிமுறையில் உள்ளவர்களுடன் தமது செல்வாக்கைச் செலுத்த அல்லது அவர்களது பணியில் தலையீடு செய்ய முற்படும் துணைவேந்தர் பதவிக்கான விண்ணப்பதாரிகள் நீக்கப்படுவார்கள் என்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போது பல்கலைக்கழக பேரவையிடம் உள்ள இந்த அதிகாரம் சிறப்புப் பொறிமுறை ஒன்றிடம் வழங்கப்படுகிறது. அதாவது பல்கலைக்கழக பேரவையின் அதிகாரம் நீர்த்துப்போகச் செய்யப்படுவதாக கல்வியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் துணைவேந்தருக்குப் போட்டியிடுபவர்கள் பேரவையினால் வாக்களிக்கப்பட்டு தேர்வு செய்யப்படுவார்களா என்ற விளக்கமும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் புதிய நடைமுறையில் இல்லை.

இதேவேளை, யாழ். பல்கலைக்கழகத்தில் மாத்திரம் துணைவேந்தர் வெற்றிடம் காணப்படுகிறது. அந்த வெற்றிடத்தை நிரப்ப விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதும் கடந்த 3 மாதங்களுக்கு மேலாக தெரிவு இழுபறியில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தனது கடமையை பொறுப்பேற்றார் மேஜர் ஜெனரல் நந்த மல்லவ ஆராச்சி

கொழும்பு, பெப். 08

பல்நோக்கு அபிவிருத்திச் செயலணிச் செயலாளர் அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகமாக ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் நந்தமல்லவ ஆராச்சி நேற்றுக் காலை தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

கொழும்பு 01, செதம் வீதி, இலக்கம் 17 இல் அமைந்துள்ள பல்நோக்கு அபிவிருத்தி செயலணி திணைக்களத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை பிரகடனத்திற்கமைய வறுமையற்ற இலங்கையைக்கட்டியெழுப்பும் எண்ணக்கருவினை செயற்படுத்துவதற்காக பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களம் அமைக்கப்பட்டுள்ளது.

பம்பலப்பிட்டிய சிறி வஜிராராமையின் விகாராதிபதி சங்கைக்குரிய திருக்குணாமலையே ஆனந்த நாயக்க தேரர் உள்ளிட்ட மகாசங்கத்தினர் பிரித் பாராயணம் செய்து ஆசி வழங்கினர்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னாரில் உள்ள மாகாண மேல் நீதிமன்றத்தில் நடந்தது. மன்னாரில் தேவாலயம் ஒன்றை அண்டிய பகுதியில் – வீதியில் – திருக்கேதீஸ்வரம் திருக்கோவிலை ஒட்டி அமைக்கப்பட்ட வளைவு சம்பந்தமானது.

இந்த வழக்கில் ஒரு விசேடம் – அந்த வளைவை அமைக்கப்படுவதற்கு எதிராக வழக்கைத் தொடுத்தது கிறிஸ்தவ தேவாலயம். இந்துக்கள் தரப்பினால் வளைவு அமைக்கப்படுகின்றது, அதை ஆட்சேபித்து திருக்கேதீஸ்வர பரிபாலன சபையையும் சம்பந்தப்பட்ட பிரதேச சபையையும் எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிட்டு வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது.

வழக்காளி கிறிஸ்தவ தேவாலயத் தரப்பு. எதிராளி தேவாரப் பாடல்பெற்ற திருக்கேதீஸ்வரம் ஆலய நிர்வாகம். வழக்கை விசாரிப்பவர் சஹாப்டீன் என்ற முஸ்லிம் நீதிபதி.

இன்னும் ஒரு விசேடமும் உண்டு. திருக்கேதீஸ்வரப் பரிபாலன சபைக்காக – இந்து சமயத் தரப்புக்காக – நீதிமன்றத்தில் முன்னிலையாகி வாதிடுபவர் ஜனாதிபதி சட்டத்தரணியும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன். அவர் ஒரு கிறிஸ்தவ மத போதகரும் கூட.

சமயங்களுக்கு இடையிலான வழக்கு என்றாலும் சமய சமரசம் நன்றாகப் பேணப்படுகின்றது என மகிழலாம்.

இந்த வழக்கு கடந்த தவணைக்கு எடுக்கப்பட்டபோது திருக்கேதீஸ்வர ஆலய பரிபாலன சபை சார்பில் முன்னிலையான சுமந்திரன் ஒரு தகவலை நீதிமன்றத்துக்குத் தெரியப்படுத்தினார்.

கடந்த வருடம் சிவராத்திரி காலத்தில் தான் இந்த வளைவு தொடர்பான சர்ச்சை எழுந்தது. இப்போதும் சிவராத்திரி வருகின்றது. சிவராத்திரியின் போது ஐந்து நாள்கள் அப்பகுதியில ஆலய பரிபாலன சபை வழமைபோல வளைவை அமைக்கும் என்ற தகவலை அவர் நீதிமன்றுக்குத் தெரியப்படுத்தினார்.

இதை ஒரு தகவலுக்காக முற்கூட்டியே நீதிமன்றுக்குத் தெரியப்படுத்துவதாக அவர் சொன்னார். அப்படி வளைவு அமைப்பதற்கு அனுமதிக்குமாறு நீதிமன்றத்திடம் அவர் விண்ணப்பிக்கவில்லை. மாறாக, தமது தரப்பு – திருக்கேதீஸ்வர ஆலய பரிபாலன சபை – அப்படி முடிவு எடுத்து நடவடிக்கை எடுக்கவுள்ளது என்ற தகவலை வழக்குப் பதிவேடுகளில் அவர் பதியச் செய்தார். அவ்வளவே.

நேற்று முன்தினம் அந்த வழக்கு எடுக்கப்பட்டபோது எதிராளிகள் (திருக்கேதீஸ்வர ஆலய பரிபாலன சபையினர்) வரும் மகா சிவராத்திரி தினத்தை ஒட்டி சர்ச்சைக்குரிய – சம்பந்தப்பட்ட இடத்தில் – வீதிக்குக் குறுக்காக வளைவு அமைப்பதற்கு வழக்காளிகள் ஆட்சேபிக்க மாட்டார்கள் என்று மன்றுக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

இரு தரப்பு இணக்கத்தையும் வரவேற்ற நீதிமன்றம் எதிர்வரும் 19ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை அங்கு மீண்டும் வளைவு அமைத்துச் செயற்பட முற்கூட்டியே அனுமதி வழங்கப்படுவதாக அறிவித்தது.

எது, எப்படியோ மத நல்லிணக்கம் ஏற்பட்டால் மகிழ்ந்து போகின்றவர்கள் நம் மக்கள்தானே...!

இந்த வழக்கில் சுமந்திரனுக்கு ஜூனியராக சட்டத்தரணிகள் சயந்தன், புரந்திரன் ஆகியோர் முன்னிலையாகினர்.

★ ★ ★

அடுத்த வழக்கு நேற்று கொழும்பில் 'ட்ரயல் அட்பார்' மேல்நீதிமனறத்தில் நீதிபதிகள் சம்பா ஜானகி ராஜரட்ண, அமால் ராஜகருணா, நவரட்ண மாரசிங்க ஆகியோர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஐந்து மாணவர்கள் உட்பட பதினொரு தமிழர்கள் கடத்தப்பட்டு, கப்பம் கோரப்பட்ட நிலையில் காணமலாக்கப்பட்ட விவகாரம் தொடர்பான வழக்கு.

இந்த வழக்கில் 14 கடற்படையினருக்கு எதிராகக் குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. குற்றம் சுமத்தப்பட்ட 14 ஆவது எதிரி முன்னாள் கடற்படைத் தளபதியும் கூட்டுப் படைகளின் தளபதியாகவும் இருந்த அட்மிரல் ஒவ் த ப்ளீட் வசந்த கரன்னகொட. இந்த வழககில் எதிரியாகப் பெயர் சுட்டப்பட்டு குற்றப்பத்திரத்தில் சேர்க்கப்பட்ட பின்னர், அவர் வழக்குக்கு வராமல் விடுவது இது மூன்றாவது தடவை.

14 ஆவது எதிரிக்கு அழைப்பாணை இன்னும் வழங்கப்படவில்லை என்று நீதிமன்றத்தில் கூறப்பட்டது. மீண்டும் அழைப்பாணையை பொலிஸ் மா அதிபர் ஊடாகவும் கடற்படைத் தளபதி ஊடாகவும் அவருக்கு விசேடமாக அனுப்பி வைத்து அவரிடம் சேர்ப்பிப்பதற்கு 'ட்ரயல் – அட்பார்' நீதிமன்றம் உத்தரவிட்டது.

வசந்த கரன்னகொட சார்பாக அரசியல் பழிவாங்கல் விவகாரம் தொடர்பில் சம்பந்தப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கின்றமையால் அந்த ஆணைக்குழு விசாரணைகள் முடியும் வரை மேற்படி 'ட்ரயல் – அட்பார்' விசாரணையை நிறுத்தும்படி சம்பந்தப்பட்ட ஆணைக் குழுவால் நீதிமன்றுக்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

ஆனால் நீதிமன்ற விசாரணையில் தலையிடும் அதிகாரம் ஜனாதிபதி ஆணைக் குழுவுக்குக் கிடையாது என்று தெரிவித்து, அந்தப் பரிந்துரையை நிராகரித்துவிட்டு, ட்ரயல் அட்பார் மன்று தனது நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றது.

ஆனால் இந்தப் பதினொரு பேர் கடத்திக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பான புலன்விசாரணையின் போது புலனாய்வாளர்களினால் தாம் கைது செய்யப்படுவதைத் தடுக்கும் விதத்தில் உயர்நீதிமன்றத்தில் உத்தரவு பெற்றவர் கரன்னகொட.

அதேபோன்று ட்ரயல் அட்பார் நீதிமன்ற விசாரணைக்குத் தடை போடுவதற்காக வசந்த கரன்னகொட இப்போதும் உயர்நீதிமன்றத்துக்குச் செல்லலாம் என பேச்சடிபடுகின்றது. அதற்காகத்தான் இந்த வழக்கில் எதிரியாகக் குற்றம் சுமத்தப்பட்ட பின்னரும், நீதிமன்றத்தில் நேரில் பிரசன்னமாகி குற்றப்பத்திரத்தைப் பெறாமல் அவர் இழுத்தடித்து வருகின்றார் என்று ஒரு பேச்சு உண்டு.

இந்த வழக்கில் எஞ்சிய எதிரிகளான 13 கடற்படையினர் சார்பிலும் சுமார் இருபது, இருபத்தியைந்து சிரேஷ்ட சட்டத்தரணிகள் அனைவருக்கும் சிங்களவர்கள் நீதிமன்றத்தில் பிரசன்னமாகியிருக்கின்றனர்.

மறுபுறத்தில் காணாமலாக்கப்பட்ட பதினொரு தமிழர்களின் குடும்பங்கள் மற்றும் உறவுகள் சார்பில் ஒரேயொரு சட்டத்தரணியின் அனுசரணையோடு தனித்துக்களம் இறங்கியிருக்கின்றார் மற்றொரு தமிழ் ஜனாதிபதி சட்டத்தரணியான கே.வி.தவராசா.

இந்த வழக்கில் பல மலைகளோடு அவர் மோதவேண்டியிருக்கும். முதலில் வழக்கு விசாரணையே நடக்கவிடாமல் சட்டத்தடை போட அரசு ஆதரவு பெற்ற படை அதிகாரியான கரனன்கொட தரப்பு முழு முனைப்பாக நிற்கும்.

எப்படிக் காய் நகர்த்தப் போகின்றார் கே.வி.தவராசா?

மீண்டும் இம்மாத இறுதியில் இந்த வழக்கு ட்ரயல் அட்பார் மன்றில் எடுக்கப்படும் போது நிலைமை தெளிவாகும் என எதிர்பார்க்கலாம்.

– மின்னல் –

## இலங்கையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த நேரத்தில் சி.ஏ.சந்திர பிரேம 'தடி பிரியந்த' என்று அழைக்கப்பட்டார்.

தென்னிலங்கையில் சிங்கள இளைஞர்களின் தீவிரவாத எழுச்சி கொடிகாட்டிப் பறந்தபோது அந்த இளைஞர்களை இலக்கு வைத்து – இராணுவத்துக்குச் சார்பாக – புரட்சிகர மக்கள் செஞ்சேனை (People's Revolutionary Red Army PRRA) என்ற இரகசிய அமைப்பு செயற்பட்டது. அந்த அமைப்பின் முக்கிய உறுப்பினராக இருந்தவர் இந்த சந்திர பிரேம என்ற தடி பிரியந்த.

மேற்படி அமைப்பு படுகொலைகள் மற்றும் வலிந்து காணாமலாக்கப்பட்ட சம்பவங்களுடன் நேரடியாகத் தொடர்புபட்டுள்ளது என்று அறிக்கையிட்ட பத்திரிகையாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் போன்றோருக்கு இந்தக் குழு மரண அச்சுறுத்தல் விடுத்து வந்தது என்று கூறப்படுகின்றது.

1989இல் மனித உரிமைகள் சட்டத்தரணிகளான சரித்த லங்காபுர, காஞ்சன அபேபால ஆகியோர் படுகொலை செய்யப்பட்ட விவகாரம் தொடர்பாக 2000 ஆம் ஆண்டில் சந்திரப்பிரேம கைது செய்யப்பட்டார். எனினும், போதிய சாட்சியங்கள் இல்லாதமையால் அவர் தப்பிக்கொண்டார்.

அதன் பின்னர் பல அரசியல் கட்சிகளுடன் அவர் தொடர்பு பட்டிருந்தார்.

அண்மைக் காலத்தில் பத்திரிகைகளின் பத்தி எழுத்தாளராகச் செயற்பட்ட அவர், 2012இல் கோட்டாபய ராஜபக்ஷ குறித்து ஒரு நூல் எழுதினார். அந்த நூலில் 2009 இல் முடிவுற்ற புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் இலங்கை இராணுவம் எந்த யுத்தக்குற்றமும் இழைக்கவில்லை என்று நுணுக்கமான முறையில் வாதங்களை அடுக்கியிருந்தார்.

"துணிச்சலான பல மனித உரிமைகள் சட்டத்தரணிகளின் கொலையுடன் நேரடியாகத் தொடர்புபட்டவர் என்று குற்றம் சுமத்தப்பட்ட நிலையில் – அது குறித்து சரியான முறையில் சட்டத்தின் முன் விசாரிக்கப்படாத ஒருவர் – பின்னர் ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸிலில் போய் அமர்வது என்பது மோசமான முரணிலை" என்று விசனம் தெரிவித்திருக்கின்றார் மனித உரிமைகள் நிலையத்தின் நிறைவேற்று இயக்குநரான யஸ்மின் சூகா அம்மையார்.

"(ஜெனிவாவில்) மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு சமூகம் தரும் மனித உரிமை ஆர்வலர்களை அச்சுறுத்தி, மிரட்டும் கடந்த கால வரலாற்றைக் கொண்டது இலங்கை. அந்த நிலையில் இத்தகைய ஒரு மனிதர் அந்த நாட்டின் ஜெனிவா தூதரகத்துக்குப் பொறுப்பாக இராஜதந்திரப் பதவிக்கு வருவது வெளிப்படையாகவே பாதுகாப்பானதல்ல" – என்றும் அவர் கூறினார்.

"இலங்கை கொண்டாடும் ஜனநாயகத்தில் அரச சார்பு கிரிமினல் வேலைகள் தண்டிக்கப்படமாட்டா என்பது அடிக்கோடிட்டுக் காட்டப்பட வேண்டியதாகும்." – என்று இலங்கையில் ஜனநாயகத்துக்கான ஊடகவியலாளர்கள் அமைப்பின் இணைப்பாளர் பாஷன அபேவர்த்தன தெரிவித்தார்.

"கொலைக் குழு ஒன்றில் உறுப்பினராக இருந்தவர் எனக் கருதப்படும் ஒருவர் நாட்டின் ஐ.நாவுக்கான பிரதிநிதியாக நியமிக்கப்படலாம் என்ற அளவுக்கு இங்கு உண்மைகள் ஆழமாக தோண்டிப் புதைக்கப்பட்டுள்ளன. ஒருவர் கூட அதற்கு எதிராக ஆட்சேபனை தெரிவிக்காதமை ஆச்சரியத்துக்குரியது" என்றும் அவர் கூறினார். (உ)

## ஐக்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பவர்கள் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியுடன் இணைந்து பயணிக்கலாமே.

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

ஐக்கிய தேசியக் கட்சியை சேர்ந்த உறுப்பினர்கள் சிலர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் இணைந்து ஆட்சியமைக்கத் தயார் என்று கூறிக்கொள்கின்றனர். இது கவலையளிக்கின்றது.

ஏனெனில், ஜனாதிபதிக்கு எனத் தனிப்பட்ட கொள்கை உண்டு. அதன்படி அவர்கள் ஆட்சி அமைத்துள்ளனர்.

இந்நிலையில், எமக்கெனத் தனிக் கொள்கையுண்டு. மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும் என்ற எண்ணமுண்டு. ஐ.தே.க. உறுப்பினர்களுக்கெனத் தனிப்பட்ட ரீதியில் கௌரவமும் உண்டு.

எனவே, ஜனாதிபதியுடன் இணைவது மொட்டுக் கட்சியினருடன் கைகோர்க்கும் முயற்சியாகவே கூற முடியும். இதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

இவ்வாறாக அவர்களுடன் இணைந்து பயணிக்கத் தயாரெனின் அவர்கள் செய்த விடயங்கள் அனைத்தும் சரியென்றாகிவிடுமே. அந்தவகையில் கோட்டாபய ராஜபக்ஷவுடன் இணைந்து பயணிப்பதென்பது சாத்தியமற்ற விடயமாகும். – என்றார். (ஜ)

## 'ராகிங்...'

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நடைபெற்ற கூட்டத்திலேயே மூன்று முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இதன்படி, மாணவர் நலச் சேவை உதவிப் பதிவாளர், மாணவர்கள் ஒழுக்காற்று உத்தியோகத்தர்கள், மாணவர் ஆலோசகர்கள், மூத்த மாணவர் ஆலோசகர்கள் அடங்கிய குழு அமைத்துச் சம்பவ இடத்துக்கு நேரில் சென்று விசாரணை நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், மாணவிகளுக்குப் பாலியல் ரீதியான துன்புறுத்தல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படும் குறுந்தகவல்கள், வட்ஸ் அப் தகவல்கள், தொலைபேசி உரையாடல்கள் அடங்கிய தரவுகளைப் பொலிஸாரின் இணைய வழிக் குற்றங்கள் பிரிவு (Sri Lankan Police Cyber Crime Unit) ஊடாக விசாரணை நடத்தல் மற்றும் மாணவர் ஒன்றியம் உடனடியாக புதுமுக மாணவர் வரவேற்பு நிகழ்வை நடத்த ஒழுங்கு செய்தல் ஆகிய 3 தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

யாழ்.பல்கலைக்கழகக் கிளிநொச்சி வளாகத்தில் பயிலும் மாணவி ஒருவர் பகிடிவதை காரணமாகத் தற்கொலைக்கு முயன்ற சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி, உயர்கல்வி அமைச்சர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் மட்டத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டன. அந்த முறைப்பாடு தொடர்பாக யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்துக்குக் கடும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன.

இந்நிலையில் யாழ். பல்கலைக்கழக ஒழுக்காற்று உத்தியோகத்தர்கள், முறைப்பாட்டு அதிகாரி, பிரதி முறைப்பாட்டு அதிகாரிகள், மாணவ ஆலோசகர்கள், மூத்த மாணவ ஆலோசகர்கள், மாணவர் நலச் சேவைகள் உதவிப் பதிவாளர் உட்பட மாணவர் ஒழுக்கத்துடன் தொடர்புபட்ட அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கி நேற்று யாழ்ப்பாணத்திலுள்ள பிரதான வளாகத்தில் கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்தக் கூட்டம் நிறைவடைந்ததும் நண்பகல் 12 மணியளவில் கூட்டத்தில் அமைக்கப்பட்ட குழு, சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படும் கிளிநொச்சி வளாகத்துக்கு நேரில் சென்று விசாரணைகளை முன்னெடுக்கப் பயணமாகினர்.

இதேவேளை, யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பையும் ஊக்கங்களையும் வழங்குவதாக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெறுவதாகக் கூறப்படும் பகிடிவதை குறித்து வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தனிப்பட்ட முறையில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளார்.

அவர் எதிர்வரும் திங்கட்கிழமை யாழ். பல்கலைக்கழகத்துக்குச் சென்று இந்த விடயங்கள் தொடர்பாக நேரில் ஆராய்வார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் இது குறித்து ஆராய்வதற்கென உயர்கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தலைமையில் அதிகாரிகள் குழு ஒன்று எதிர்வரும் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு வருகை தரவுள்ளது என்றும் கூறப்பட்டது. (ஐ-07)

## பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகுதி வாய்ந்த அதிகாரிக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜா கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

'யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி தொழில்நுட்பப் பீடத்தில் இடம்பெறும் பகிடிவதைகள், பாலியல் துன்புறுத்தல்கள்' என்பது தொடர்பான செய்தி குறித்துத் தங்களது கவனம் ஈர்க்கப்படுகிறது. அத்துடன் மேலும் பல இணையத்தளங்களில் பகிடிவதையில் ஈடுபட்ட மாணவர்களின் ஒளிப்படங்கள் மற்றும் அவர்கள் அனுப்பிய அலைபேசித் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

'அது தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தால் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்தித் தங்களால் எடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையை உடன் எமக்கு அனுப்பிவைக்குமாறு நீங்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்' என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கடிதத்துக்கு அமைய அறிக்கை வழங்குவது என்று யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று இடம்பெற்ற மாணவர் ஒழுக்கம் தொடர்பான உயர்மட்ட அதிகாரிகள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ஐ)

## மொட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ ஆகியோரிடம் தாம் கோரிக்கை விடுக்கிறார் எனவும் அவர் கூறியுள்ளார்.

கருத்துக் கணிப்புகளின்படி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனித்துப் போட்டியிட்டால் முழு நாட்டிலும் நான்கு ஆசனங்களை மாத்திரமே கைப்பற்ற முடியும் எனவும் ரோஷான் ரணசிங்க குறிப்பிட்டார்.

இதனிடையே எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட அமைக்கப்படும் புதிய கூட்டணி தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முன்வைக்கும் நிபந்தனை அநீதியானது என ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டி.வி.சானக்க தெரிவித்துள்ளார்.

இந்த நிபந்தனைகள் காரணமாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கே அநீதி ஏற்படும் எனவும் அவர் கூறியுள்ளார். (ஜ)

## பட்டதாரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொழிலை எதிர்பார்த்துள்ளவர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள முதலாவது பட்டப் படிப்பொன்றை அல்லது அதற்குச் சமமான தகைமையாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள டிப்ளோமா பாடநெறி ஒன்றை 2019.12.31ஆம் திகதி முழுமைப்படுத்தியிருக்கவேண்டும்.

விண்ணப்பதாரி விண்ணப்பிக்கின்ற பிரதேச செயலாளர் பிரிவில் நிரந்தரமாக வசிப்பவராகவும் 2020.01.01ஆம் திகதிக்கு பட்டம் பெற்று ஒரு வருடத்துக்கும் அதிக காலம் தொழிலின்றி இருப்பதாகவும் கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலாளர் உறுதிப்படுத்தவேண்டும்.

விண்ணப்பங்களை உரிய முறையில் நிறைவு செய்து பட்டச் சான்றிதழ் அல்லது டிப்ளோமா சான்றிதழ் மற்றும் பெறுபேறு ஆவணத்தின் ஒளிப்படப் பிரதி ஒன்று (மூலப் பிரதியுடன் ஒத்திருப்பதைச் சமாதான நீதிவான் ஒருவர் அல்லது சட்டத்தரணி ஒருவரினால் உண்மையான பிரதி என்பதை உறுதிப்படுத்தி) 2020.02.20ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை தபால் திணைக்களத்தின் ஸ்பீட் போஸ்ட் கூரியர் சேவையின் ஊடாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்களை ஜனாதிபதி அலுவலகத்தின் http://www.presidentsoffice.lk என்ற இணையத் தளத்திலிருந்து தரவிறக்கம் செய்ய முடியும்.

தொழில் வாய்ப்பற்ற பட்டதாரிகள் டிப்ளோமாதாரிகளுக்கு தொழில் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் 2020, நிறுவன முகாமைத்துவ மற்றும் ஒருங்கிணைப்பு பிரிவு, ஜனாதிபதி அலுவலகம், காலி முகத்திடல், கொழும்பு – 01 என்ற முகவரிக்கு விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

கடிதத்தின் இடதுபக்க மேல் மூலையில் பட்டதாரியாயின் பட்டதாரி / (மாவட்டத்தின் பெயர்) என்றும் டிப்ளோமாதாரி / (மாவட்டத்தின் பெயர்) என்றும் குறிப்பிடப்படுதல் வேண்டும். குறித்த திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப் படும். தெரிவு செய்யப்படுபவர்கள் கல்வி அமைச்சு (கிராமிய தோட்டப் பாடசாலைகள்), நீர்ப்பாசன திணைக்களம், கமநல சேவைகள் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், சுதேச மருத்துவ (ஆயுர்வேத) திணைக்களம், சுகாதார அமைச்சு (கிராமிய வைத்தியசாலைகள் / மருத்துவ நிலையங்கள்) நில அளவை திணைக்களம், விவசாய திணைக்களம், சிறு ஏற்றுமதி பயிர்கள் திணைக்களம், விலைமதிப்புத் திணைக்களம், குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் ஆகிய துறைகளில் சேவையில் ஈடுபடுத்தப்படுவர்.

ஒரு வருடப் பயிற்சிக் காலத்தில் ரூபா 20,000 கொடுப்பனவு வழங்கப்படும். நியமனங்கள் மாவட்ட மட்டத்தில் வழங்கப்படுவதுடன், முதலாவது நியமனம் வழங்கப்படும் மாவட்டத்தில் ஐந்து வருடங்கள் சேவை செய்வது கட்டாயமானதாகும் – என்றுள்ளது. (ஐ)

## மன்னாரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முள்ளிக்குளம், பங்குத்தந்தை லோறன்ஸ் லியோ தலைமையில் இடம்பெற்ற இந்த அடிக்கல் நாட்டும் நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை கலந்து கொண்டார்.

விருந்தினர்களாக, மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார், கறிற்றாஸ் செடே தேசிய நிலையத்தின் இயக்குநர் அருட்தந்தை மகேந்திர குணதிலக்க, மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதைய இயக்குநர் அருட்தந்தை எஸ்.அன்ரன் அடிகளார், மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.குணபாலன், முசலி பிரதேச செயலாளர் வசந்தகுமார், கடற்படையின் வடமேல் கட்டளைத்தளபதி ரியல் அட்மிரல் றுவான் பெரேரா உட்பட அருட்தந்தையர்கள், முள்ளிக்குளம் கிராம மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில், முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்ட 11 வீடுகளுக்கு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது. மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை மற்றும் வருகைதந்த விருந்தினர்கள் அடிக்கற்களை நாட்டி வைத்தனர். (ஐ)

## வலி.வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இவ்வாறான நிலையில் குறிப்பிட்டளவு காணிகள் விடுவிக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறு விடுவிக்கப்பட்ட காணிகளில் மக்கள் மீளக் குடியமர்ந்து வருகின்றனர். ஆனால் குடியமர்வதற்கான முழுமையான வசதிகள் இன்னமும் ஏற்படுத்திக் கொடுக்கப்படாத நிலைமையே இருக்கின்றது.

ஆனாலும் மக்கள் பலரும் அந்தக் காணிகளில் குடியமர்ந்துள்ளனர். இவ்வாறான நிலையில் விடுவிக்கப்பட்ட காணிகளில் குடியமர்வதில் மக்கள் ஆர்வமில்லை என யாழ். மாவட்ட இராணுவத் தளபதி கூறியிருக்கின்றார். அவருடைய அந்தக் கூற்று ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது. ஏனெனில் தமது சொந்த நிலங்களில் குடியமர்வதில் மக்கள் அக்கறையுடனேயே செயற்பட்டு குடியமர்ந்து வரும் நிலைமையே காணப்படுகிறது.

ஏற்கனவே ஒரு தொகுதி காணிகள் விடுவிக்கப்பட்டிருந்தாலும் இன்னும் பல ஆயிரம் ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படாமல் படையினரின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றன. ஆகையினால் அவற்றையும் விடுவித்து மக்களை மீள்குடியமர்த்துமாறு அரசிடம் கோருகின்றோம்.

எனவே காணிகளை விடுவிக்கும் நடவடிக்கைகளை இந்த நாடாளுமன்றம் கலைவதற்கு முன்னதாக மேற்கொள்ள வேண்டும். ஏனெனில் காணிகளை விடுவிக்க வலியுறுத்தி மக்கள் போராடும் நிலைமையும் காணப்படுகின்றது. ஆகையால் படையினர் வசமிருக்கும் பொதுமக்கள் காணிகளை விடுத்து அவர்களை மீளக்குடியமர்த்தி அவர்களுக்கான அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம் – என்றார். (ஐ-07)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online


## மாணவரை வழிப்படுத்தும் நல்மேய்ப்பன் நம் சமூகத்திற்கு எப்போது கிடைப்பான்?

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் சமூகத்தின் மத்தியில் பாலியல் வக்கிரம் நிறைந்த மோசமான பகிடிவதைக் கொடூரங்கள் இடம்பெறுவதான செய்திகள் வெளியாகி யாழ் சமூகத்துக்கே பேரவமானத்தை ஏற்படுத்தி நிற்கின்றன.

அப்படிப் பாலியல் வக்கிரச் சம்பவங்களே இடம்பெறவில்லை என்றும், வெளியான செய்திகள் எல்லாம் இட்டுக்கட்டியவை என்றும், இலை மறை காயாக ஓரிருவர் அப்படி நடந்து கொண்டிருக்கலாம் என்றெல்லாம் இப்போது சமாளிப்புகள், சாக்குப் போக்குகள் சொல்ல சிலர் ஆரம்பித்துள்ளனர்.

பொதுவாக ஊடக தர்மத்தின்படி ஒழுக வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. குற்றம் சுமத்துவோர் முதலில் தங்களை வெளிப்படையாக யார் என்று வெளிப்படுத்தி, அடையாளப்படுத்திய பின்னர், குற்றச்சாட்டு விரலை நீட்ட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

குற்றத்தைச் சுமத்துகின்ற தரப்பு, அத்தகைய குற்றம் சுமத்தப்படுவதால் எழுகின்ற விடயங்களுக்குப் பொறுப்புக் கூறத் தக்கவையாகத் தம்மை வெளிப்படுத்துவது மிக மிக அத்தியாவசியமானது. அது ஊடக தர்மத்தின் அடிப்படையும் கூட.

இதனால்தான், தம்மை யார் என வெளிப்படுத்தி, அடையாளப்படுத்தாமல், தாம் வெளியிடும் அநாமதேயச் செய்திகளுக்குப் பொறுக் கூறும் கடப்பாட்டை ஏற்காமல், ஒளித்துப் பிடித்து விளையாடும் போக்கில், மறைவில் இருந்து கரவாகச் செய்தி வெளியிடும் பல இணையத்தளங்களையும், சமூக வலைத்தளங்களையும் நாம் மோசமாக விமர்சிக்கின்றோம். அவற்றை அங்கீகரிக்க மறுக்கின்றோம்.

மேற்படி பாலியல் வக்கிரப் பகிடிவதை தொடர்பில் இத்தகைய ஊடகங்களிலேயே முதன் முதலில் செய்திகள் வெளியாகின. அதனால் அவை நம்பத் தகுந்தவை அல்ல என்றும், கவனிப்புக்கு உட்படுத்தக்கூடியவை அல்ல என்றும் கூட சிலர் வாதிடுகின்றனர்; கருத்துக்களை முன்வைக்கின்றனர்.

அந்த வாதங்கள் மறுக்கக் கூடியவை அல்ல. பொறுப்புக் கூறல் கடப்பாடு இல்லாமல் அநாமதேயப் பெயரில் இயங்கும் இணையத் தளங்களின் செய்திகளுக்கும், தகவல்களுக்கும் முக்கியத்தும் கொடுக்கலாமா என்றால் இல்லை என்றுதான் கூற வேண்டும்.

ஆனால், இப்போது பாலியல் வக்கிரப் பகிடிவதை தொடர்பான செய்திகளை பகுப்பாய்வதில் இந்த முறைமையை நாம் வித்தியாசமாகத்தான் பார்க்க வேண்டும் என நினைக்கிறோம்.

எவ்வாறு தம்மை வெளிப்படையாக அடையாளப்படுத்தி, பொறுப்புக் கூறும் கடப்பாட்டை நிறைவு செய்யும் ஊடகங்களுக்கு மத்தியில், சில சமூக வலைத்தளங்களும், இணையத் தளங்களும் அநாமதேயமாகச் செயற்பட்டு, செய்தித் துறைக்கு இழுக்குத் தேடித் தரும் முறையில் நடந்து கொள்கின்றனவோ அதேபோன்றுதான் யாழ் பல்கலைக்கழக மாணவர் குழாம் என்ற பெரிய சமுதாயத்துக்குள், அந்த சமுதாயத்தைப் பயன்படுத்தி அதற்குள் ஒளித்துக் கொண்டு ஒரு சில புல்லுருவிகள் இந்தப் பகிடிவதை அராஜகங்களைப் புரிந்து கொண்டிருக்கின்றார்கள்.

சேற்றை அள்ளித் துப்புரவு செய்வதற்குச் சேற்றுக்குள் இறங்க வேண்டியிருப்பது போல –

முள்ளை முள்ளால் எடுக்கின்ற தந்திரம் போன்று –

பல்கலைக்கழக மாணவ சமுதாயத்துக்குள் ஒளிந்திருந்து கொண்டு, அதையே கவசமாகப் பயன்படுத்தி ஒளித்துப் பிடித்து விளையாடும் ‘ராகிங்’ வக்கிரப் புத்திக்காரர்களை அம்பலப்படுத்தவும் அவர்கள் நாடும் அதே வழி முறை சில சமயங்களில் தவிர்க்க முடியாததாகின்றது.

யாழ் மாணவன் வரப்பிகாஷ் படுகொலையுடன் இந்த ‘ராகிங்’ கொடூரம் முடிவுக்கு வரும் என எதிர்பார்த்தோம்.

வருடா வருடம் பல்கலைக்கழகத்துக்குள் புகும் நமது மாணவ சமூகத்தில் இந்த வக்கிரப்புத்தி நிறைந்த மனநோயாளிகள் கணிசமானோரும் இடம்பெற்று விடுவது நமது சமுதாயத்தின் துரதிஷ்டம்.

அவர்களின் சக மாணவர்கள் என்றும், அவர்களையும் உள்ளடக்கிய அமைப்புக்களின் பிரதிநிதிகள், அலுவலர்கள், தலைவர்கள், செயலாளர்கள் என்றும் கூறிக் கொள்ளும் பிரகிருதிகள் இத்தகைய கொடூரங்கள் தொடர்வதற்கான கவசத்தை (Cover) தங்களை அறியாமல், விரும்பியோ விரும்பாமலோ வழங்குகின்றார்கள் என்பதுதான் இங்கு ஈண்டு கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும்.


பாலியல் வக்கிரம் இல்லாவிட்டாலும் கூட பகிடிவதை ஒரு பெரும் சமூகச் சீரழிவே. சமூகத்தைப் பீடித்த மனநோயே.

அதை ஒழிப்பேன், அதற்கு நம் சமூகத்தில் இடமளிக்க மாட்டேன் என்று பிரதிக்ஞை செய்து, நேர்மைத்துணிவுடன் பிரகடனப்படுத்தி, அதைத் துணிச்சலாக முன்னெடுக்கும் மாணவர் அவைத் தலைவர்கள் யாரும் எம் மத்தியில் வரவில்லை.

அப்படி நேர்மையான – துணிச்சலான – சமூகத்தை சரியான வழியில் நெறிப்படுத்தும் திடசங்கற்பமும், பற்றுறுதியும் கொண்ட – ஒரு மாணவர் அவையும், மாணவ தலைவர்களும் வரும் வரை – நல்மேய்ப்பன் கிட்டும் வரை – இத்தகைய சமூகச் சீரழிவுகளைத் தொடர்ந்து முன்னெடுக்கும் மனவக்கிர நோயாளிகளின் கொட்டம் அடங்காது. அது கொண்டாட்டமாகத் தொடரவே செய்யும்.

# கடந்த காலத்தை குற்றம் சுமத்தாது நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும்

## ஜனாதிபதி கோட்டாபய கோரிக்கை



கொழும்பு, பெப். 08

கடந்த காலம் மற்றும் பிரச்சினைகளை நோக்கி விரல் நீட்டிக் கொண்டிருப்பதைத் தவிர்த்து வீழ்ச்சியுற்றிருக்கும் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் என்ற வகையில் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றார் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் பெருந்தோட்ட, நிதி நிறுவனத் தலைவர்கள் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

‘நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு’ கொள்கைப் பிரகடனம் தேர்தல் வெற்றியை எதிர்பார்த்து தயாரிக்கப்பட்ட ஒன்றல்ல.

அது பல்வேறு நிபுணர்கள் மற்றும் துறை சார்ந்தவர்களுடன் பல வருடங்களாக ஆய்வு செய்து மக்கள் பணிக்காக தயாரிக்கப்பட்ட ஒன்றாகும்.

பல நிறுவனங்கள் நீண்டகாலமாக வெறுமனே தொழில் வழங்கும் இடங்களாக மாறியுள்ளன.

இவ்வாறு நாட்டை முன்கொண்டு செல்ல முடியாது.

நிறுவனங்களை இலாபமீட்டும் நிறுவனங்களாக மாற்றுவது புதிய தலைவர்களினதும் பணிப்பாளர் சபையினதும் பொறுப்பாகும்.

நடைமுறையில் உள்ள முறைமைகளுக்குப் பதிலாக புதிய வழியொன்றின் ஊடாக வீழ்ச்சியடைந்துள்ள நிறுவனங்களை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தென்னை மற்றும் தேயிலை பயிர்ச் செய்கை அபிவிருத்தியுடன் ஏனைய பயிர்ச் செய்கைகளையும் முன்னேற்ற வேண்டும்.

புதிய ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப முறைமைகளை பயன்படுத்தி விவசாயத் துறையை முன்னேற்ற வேண்டும்.

பாரம்பரிய கைத்தொழில்களுக்கு முன்னுரிமையளித்து பாரிய வருமானத்தை ஈட்ட முடியும்.

இந்த அனைத்துத் துறைகளினூடாகவும் பெருமளவு தொழில் வாய்ப்புகளையும் உருவாக்க முடியும்.

சில நாள்களாக பட்டதாரிகள் உள்ளிட்ட குழுக்கள் தொழில் கேட்டு ஜனாதிபதி அலுவலக வளாகத்திற்கு வந்தனர்.

நாட்டில் சுற்றுலா, கணனித் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் அதிகளவு வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

எனினும் கல்வி முறைமையிலுள்ள குறைபாடுகளின் காரணமாக இந்த வெற்றிட வாய்ப்புகள் பயன்படுத்தப்படாமல் உள்ளன.

தொழிற் சந்தைக்கு ஏற்ற வகையில் கல்வி முறைமையை உடனடியாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆசியா உலக பொருளாதாரத்தின் கேந்திர நிலையமாக மாறி வருகின்றது.

இன்னும் நான்கு வருடங்களில் பல்கலைக் கழகங்களிலிருந்து வெளியேறும் எதிர்காலத் தலைமுறையை பயனுறுதி மிக்க வகையில் அவற்றில் ஈடுபடுத்தக்கூடிய வகையில் தேவையான சூழலை அமைத்துக் கொடுப்பதே எனது முக்கியமான நோக்கமாகும் – என்றார். (ஐ)

## தமிழரின் காணி அபகரிப்பது அரசின் கொள்கையே அல்ல

### கூறுகிறார் வாசுதேவ நாணயக்கார



கொழும்பு, பெப். 08

தமிழர்களின் காணிகளை அபகரிப்பது அரசின் கொள்கையல்ல என இராஜாங்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், வவுனியா – தச்சங்குளத்தில் தமிழர்களின் பூர்வீகக் காணிகளை அபகரிக்கும் வகையில் இனவாதச் செயற்பாடுகள் அரங்கேற்றப்படுகின்றன எனக் குற்றம் சுமத்தியிருந்தார்.

அந்தக் குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கும்போதே இராஜாங்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவிக்கையில் –

தமிழர்களின் காணிகளை அபகரிப்பது அரசின் கொள்கையல்ல. எவரும் தமிழர்களின் காணிகளை அபகரிக்கும் வகையில் செயற்பட்டால் அது தொடர்பான தகவல்களை வெளிப்படுத்த வேண்டும் – என்றார். (ஐ)

## இலங்கையின் அபிவிருத்திக்கு உதவியளிக்கிறது உலக வங்கி

கொழும்பு, பெப். 08

இலங்கையின் அபிவிருத்திக்கு தொடர்ச்சியான ஆதரவை வழங்குவதாக உலக வங்கி உறுதியளித்துள்ளது.

உலக வங்கியின் தெற்காசிய பிராந்தியத்துக்கான உப தலைவர் ஹார்விட் பேர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

உலக வங்கியின் தெற்காசிய பிராந்தியத்துக்கான உப தலைவர் ஹார்விட் பேர் இலங்கைக்கான தனது விஜயத்தை முடித்த பின்னர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தற்போது தெற்காசியாவில் உயர் மனித அபிவிருத்திச் சுட்டியுடன் கூடிய நடுத்தர வருமானம் பெறும் நாடாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

புதிய உள்நாட்டு மூலோபாயங்களை வகுப்பதிலும், அபிவிருத்திப் பங்காளி என்ற வகையிலும் ஆதரவை வழங்கி, அரசுடன் நெருக்கமாக இணைந்து செயற்படுவதாக உலக வங்கியின் தெற்காசியப் பிராந்தியத்துக்கான உப தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

நிலையான அபிவிருத்திக்காகச் சுற்றுலாத்துறை மீது அரசு கவனம் செலுத்தியிருப்பதையும் அவர் பாராட்டியுள்ளார்.

இவர் தனது விஜயத்தின்போது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் டபிள்யு.டி. லக்ஷ்மன், நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர் ஆட்டிகல உள்ளிட்ட அரசின் சிரேஷ்ட அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

### நாளை 08.02.2020 - ஞாயிற்றுக்கிழமை

நட்சத்திரம்: ஆயிலியம் சித்தம் மு.இ. 08.52 வரை இராகுகாலம் : 05.05 – 06.35
திதி : பூரணை பி.ப. 01.50 வரை சுப நேரம் : 09.35 – 11.05

# தேர்தலின் பின் தமிழர்களுக்கு எதிராக நடக்கும் செயற்பாடுகளால் வேதனை!

## சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. சபையில் விசனம்



கொழும்பு, பெப். 08

தேர்தலின் பின்னர் தமிழர்களுக்கு எதிராக நடைபெறும் சில செயற்பாடுகள் வேதனையளிக்கின்றன எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழர்களின் பூர்வீக நிலங்களை அபகரிக்கும் செயற்பாடுகள் அரங்கேற்றப்படுகின்றன.

வவுனியா – தச்சங்குளத்தில் உள்ள காணிகளில் பெரும்பான்மை மக்களைக் குடியேற்றும் வகையில் திட்டங்கள் வகுக்கப்பட்டு அங்கீகாரம் வழங்கப்பட்டு வருகிறது. வவுனியா மாவட்ட அபிவிருத்திச் சங்கத் தலைவரால் இந்த உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு வருகின்றன.

தமிழர்களின் காணிகள் அபகரிக்க முற்படுவதை அரசில் அமைச்சர்களாகவுள்ளவர்கள் கண்டுகொள்ளவில்லை. அந்த அமைச்சர் வடக்கில் சோதனைச் சாவடிகள் இல்லையெனக் கூறிகிறார். பிரதமரிடம் நற்பெயரை பெற்றுக்கொள்ளவேண்டுமென்பதற்காக அவர் அவ்வாறு கூறுகிறார்.

தமிழர்களின் காணிகளைத் திட்டமிட்டு பறிப்பதும் அதில் சிங்களவர்களைத் திட்டமிட்டுக் குடியேற்றுவதும் எதிர்காலத்தில் பாரிய பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும்.

பிரபாகரன் இல்லை என்பதால் தமிழர்கள் இனி ஆயுதமேந்தி போராட முடியாதென அமைச்சர் ஒருவர் கூறுகிறார். உண்மையில் ஆயுதமேந்தி போராடும் தேவை பிரபாகரனுக்கு இருக்கவில்லை.

அவ்வாறான சூழ்நிலைக்கு தள்ளியது இவ்வாறான காரணிகள்தான் என்பதை புரிந்துகொள்ள வேண்டும் – என்றார். (ஐ)

# கல்வி அமைச்சர் டலஸுடன் பின்லாந்து தூதுவர் சந்திப்பு



கொழும்பு, பெப். 08

கல்வி விளையாட்டு மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சர் டலஸ் அழகப்பெருமவுக்கும் இலங்கைக்கான பின்லாந்துத் தூதுவர் ஹரி கமரினனுக்கும் இடையில் விசேட சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளதாக அமைச்சின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது நாட்டின் கல்வித்துறையில் பல பிரிவுகளை அபிவிருத்தி செய்வதற்கு உதவி வழங்குவதற்கு பின்லாந்து தூதுவர் விருப்பம் தெரிவித்துள்ளார்.

பின்லாந்து கல்வி முறை தொடர்பாக இலங்கையில் உள்ள ஆசிரியர்கள் அனுபவங்களைப் பெறுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தல், ஆசிரியர்களுக்கும் – மாணவர்களுக்கும் இடையிலான புரிந்துணர்வு வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல், தேசிய கல்வியியல் கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் தொழில்நுட்பக் கல்வியை தொடர்வதற்கு வசதிகளை ஏற்படுத்துதல் போன்ற திட்டங்கள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது. (ஐ)

# விசேட அதிரடிப் படைக்கு புதிய கட்டளைத் தளபதி

கொழும்பு, பெப். 08

பொலிஸ் விடே அதிரடிப் படையின் புதிய கட்டளைத் தளபதியாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் லயனல் குணதிலக நியமிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையின் கட்டளை அதிகாரியாகசெயற்பட்ட, பயங்கரவாதத் தடுப்பு, பிரமுகர்கள் பாதுகாப்பு மற்றும் உளவுத் தகவல்கள் தொடர்பாக விசேட தேர்ச்சி பெற்ற அதிகாரியான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் எம்.ஆர். லத்தீப் கடந்த 4 ஆம் திகதியுடன் தனது 41 வருட கால பொலிஸ் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

இந்த நிலையிலேயே நேற்று முன் தினம் வியாழக்கிழமை மாலை கூடிய தேசிய பொலிஸ் ஆணைக்குழு, பிரதிப் பொலிஸ்மா அதிபர் லயனல் குணதிலகவை அதிரடிப் படையின்புதியகட்டளைத்தளபதியாக தெரிவுசெய்துள்ளது.

# மின்தடை

யாழ்ப்பாணம், பெப்.08

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை **காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.00 மணி வரை-**

**யாழ் பிரதேசத்தில் -**

விக்ரோறியா வீதி, மின்சார நிலைய வீதி, மணிக்கூட்டு கோபுர வீதி, பஸார் வீதி, ஞானம்ஸ் விடுதி, லதுசியந் விடுதி, ஹற்றன்நஷனல் வங்கியின் பிராந்திய அலுவலகம், கமலேஸ்வரி, சிவராதா புடவையகம், ரொப் பாஸ், அன்னைநாகா பூட் சிற்றி, LOLC யாழ் போதனா வைத்தியசாலை அவசர நோயாளர் பிரிவு ஆகிய பிரதேசங்களில்

– மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# நல்லூர்க் கந்தனுக்கு நெற்புதிர் அறுவடை









யாழ்ப்பாணம், பெப். 08

நல்லூர்க் கந்தன் ஆலயத்தின் நெற்புதிர் அறுவடை விழா நேற்றுக் காலை இடம்பெற்றது.

தைப்பூசநாளுக்கு முதல்நாள் கொண்டாடப்படும் இந்தப் பண்பாட்டு விழாவில் கோவில் அறங்காவலரும் சிவாச்சாரியாரும் முதலாவது புதிரை அறுவடை செய்ய ஆலயத்துக்குச் சொந்தமான மட்டுவிலில் உள்ள வயலுக்குச் செல்வார்கள் . அந்த வயலில் அறுவடை செய்யும் நெல்லில் இருந்து அமுது தயாரித்து கந்தனுக்கு படையல் செய்து பூசைகள் இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து பக்தர்களுக்கும் அமுது வழங்குதல் மரபாக கொண்டாடப்பட்டு வருகின்றது.

இந்தப் புதிர் எடுக்கும் விழா 286ஆவது ஆண்டாக இந்த வருடம் கொண்டாடப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (ஐ - 07)

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்: அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

காலைக்கதிர் Kalaikathir



# மரண தண்டனைக் குற்றவாளிகளுக்கு சட்ட நடவடிக்கை எடுக்க 7 நாள் கெடு

## நிர்பயா வழக்கில் டெல்லி நீதிமன்று உத்தரவு...!

புதுடெல்லி,பெப்.08

ஓடும்பஸ்ஸில்இளம்பெண்ணை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திக் கொடூரமாகப் படுகொலை செய்த நிர்பயா வழக்கில் குற்றவாளிகள் நான்கு பேருக்கும் தனித் தனியாக மரண தண்டனை நிறைவேற்றப்படுவதை அனுமதிக்க முடியாது என்று தீர்ப்பளித்துள்ள டெல்லிஉயர்நீதிமன்றம்,அனைத்து சட்ட நிவாரணங்களையும் பயன்படுத்த அவர்களுக்கு 7 நாள் கெடு விதித்துள்ளது.

நிர்பயா பாலியல் கொலை வழக்கு கைதிகள் 4 பேருக்கும், கடந்த முதலாம் திகதி தூக்குத் தண்டனை நிறைவேற்றுவதைத் தடை செய்து, டெல்லி விசாரணை நீதிமன்றம் ஜனவரி 31ஆம் திகதி உத்தரவு பிறப்பித்தது. இந்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என மத்திய அரசு, திகார் சிறை நிர்வாகம் மற்றும் நிர்பயாவின் பெற்றோர் சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுக்கள் மீது நேற்றுத் தீர்ப்பளித்த டெல்லி உயர் நீதின்ற



நீதிபதி சுரேஷ் குமார் கெயிட் (Suresh Kumar Kait) அடுத்த 7 நாள்களுக்குள் சட்டரீதியாக உள்ள அனைத்து நிவாரணங்களையும் குற்றவாளிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார். 7 நாள்களில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை என்றால் அதிகாரிகள் சட்டரீதியாகத் தமது கடமையைச் செய்யலாம் என்று அவர் தமது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

மரண தண்டனையை நிறுத்தி வைத்த டெல்லி விசாரணை நீதிமன்றத்தின் தடையை நீக்க மறுத்துவிட்ட அவர், முகேஷ் சிங், வினய் சர்மா ஆகியோர் அனைத்து சட்ட நிவாரணங்களையும் பயன்படுத்தி விட்டதால், அவர்கள் இருவரையும் மட்டுமாவது முதலில் தூக்கில் ஏற்ற அனுமதிக்க வேண்டும் என்ற மத்திய அரசின் கோரிக்கையை ஏற்க மறுத்து விட்டார்.

அரசமைப்புச் சட்ட பிரிவு 21இன் படி இறுதி மூச்சு நிற்கும் வரை தம்மைக் காப்பாற்றிக் கொள்ளும் உரிமை இந்தக் குற்றவாளிகளுக்கு இருப்பதாகவும் நீதிபதி தீர்ப்பில் தெரிவித்திருக்கிறார்.

# 2019இல் 1,616 இந்தியர்களை வெளியேற்றியது அமெரிக்கா!



ஜலந்தர்,பெப்.08

அமெரிக்கா 2019 ஆம் ஆண்டில் மட்டும் 1616 இந்தியர்களை அந்நாட்டில் இருந்து வெளியேற்றி இருப்பதாக புள்ளி விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

அமெரிக்க குடியேற்ற மற்றும் சுங்க அமலாக்கத் துறை வெளியிட்டுள்ள அறிவிப்பின் படி, அமெரிக்காவில் உள்ள இந்தியர்களில் 2019 ஆம் ஆண்டுமட்டும் குடியேற்ற விதிகளை மீறியமைக்காக 1,616 பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

2014 ஆம் ஆண்டிற்கு பிறகு ஒரே ஆண்டில் அதிகமானவர்கள் வெளியேற்றப்பட்டுள்ளது தற்போதுதான்.

2018 ஆம் ஆண்டில் அதிகபட்சமாக 359 பெண்கள் உள்ளிட்ட 9,818 இந்தியர்கள் குடியேற்ற விதிகளை மீறியமைக் காகக் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர் களில் 611 பேர் அமெரிக்காவை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் மெக்ஸிக்கோ எல்லை வழியாக அமெரிக்காவிற்குள் சட்ட விரோதமாகக் குடியேறியவர்கள் எனவும், பஞ்சாப்பை சேர்ந்த வர்களே அதிகமாக சட்ட விரோதமாக அமெரிக்காவில் குடியேறினர் எனவும் கூறப்படுகிறது. இந்தியாவை சேர்ந்த பலர் உரிய ஆவணங்கள் ஏதும் இன்றி அமெரிக்காவில் வசித்து வருகின்றனர் எனவும் கூறப்படுகிறது.

# யுவதியைக் கடத்தி காரில் வைத்தே திருமணமும் செய்து கொண்ட ரோமியோ!

## பொலிஸிடம் வகையாக மாட்டினார்

சினிமா பாணியில் ஓடும் காரில் வைத்து இளம்பெண்ணுக்குத் தாலிகட்டிய சம்பவம் கர்நாடகாவில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்த விவகாரத்தில் 3 பேரைக் கைது செய்துள்ள பொலிஸார்மேலும்ஒருவரைத்தேடிவருகின்றனர்.

கர்நாடகா மாநிலம் ஹசான் மாவட்டத்தில் உள்ள அர்சிகேரே என்ற கிராமத்தை சேர்ந்தவர் மணு. இவர் தனது உறவுக்கார பெண்ணை கடந்த ஒரு வருடமாக ஒருதலையாகக் காதலித்து வந்துள்ளார். பலமுறை தனது காதலை அப்பெண்ணிடம் கூறியமையோடு, அவரது வீட்டிலும் தெரியப்படுத்தியுள்ளார். ஆனால் அந்தப் பெண் மணுவின் காதலை ஏற்கவில்லை என்று கூறப்படுகிறது. பெண்ணின் வீட்டாரும் மணுவுக்குத் தங்களது மகளைக் கட்டிக் கொடுப்பதில் சம்மதமில்லை என்று தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை அன்று இளம்பெண் வழக்கம் போல ஹசான் பகுதியில் உள்ள டெய்லர் கடைக்கு வேலைக்குச் சென்றார். ஆனால் வேலைக்குச் சென்ற பெண், பின்னர் வீடுதிரும்பவில்லை.

இதனால் அதிர்ச்சி அடைந்த பெண்ணின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் எங்கு தேடியும் அவரைக் காணாமையால் துத்தா காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர். இதுகுறித்து வழக்கு பதிவு செய்த பொலிஸார் விசாரணை மேற்கொண்டதில், மணு என்ற இளைஞர் தனது நண்பர்களின் உதவியுடன் இளம் பெண்ணைக் காரில் கடத்திச் சென்று காரில் வைத்தே திருமணம் செய்துள்ளார்.

இதனையடுத்து, ராமாநகாராவில் உள்ள உறவினர் வீட்டில் அடைக்கலம் புகுந்துள்ளனர். உடனே ராமாநகாரா பகுதிக்கு விரைந்து சென்று பெண்ணை மீட்ட பொலிஸார் மணு உள்ளிட்ட மூன்று பேரைக் கைது செய்து விசாரித்தனர். அவர்களிடம் நடத்திய விசாரணையில், டெய்லர் கடைக்குப் பணிக்குச் சென்ற பெண்ணை நோட்டமிட்டு, பஸ் நிலையத்தில் காருடன் காத்திருந்தனர் எனவும், அப்போது பஸ் ஏறுவதற்காக நின்ற பெண்ணை வலுக்கட்டாயமாகக் காரில் ஏற்றி, காரில் வைத்தே திருமணம் செய்தார் எனவும் கூறியுள்ளனர்.

மேலும் 'களவாணி' படத்தில் வருவதை போன்றே, பெண்ணின் சத்தம் வெளியே கேட்காதவாறு, ரேடியோவைப் பாடவைத்தும் சென்றுள்ளனர். இதனை செல் போனில் வீடியோவாகவும் எடுத்ததே கடைசியில் அவர்கள் சிக்குவதற்கும் காரணமாகியுள்ளது.

# ராஜீவ் கொலை வழக்குக் குற்றவாளிகளின் விடுதலை பற்றி ஆளுநரே முடிவெடுக்கலாம்!

## இந்திய மத்திய அரசு நீதிமன்றத்தில் தெரிவிப்பு




சென்னை,பெப்.08

முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை வழக்கில் சிறையில் உள்ள 7 பேரின் விடுதலை குறித்து மாநில ஆளுநரே முடிவு எடுக்கலாம் என சென்னை உயர்நீதிமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை வழக்கில், முருகன், சாந்தன், பேரறிவாளன், நளினி, ரவிச்சந்திரன், ராபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோர் கைதாகி கடந்த 28 ஆண்டுகளாக சிறையில் உள்ளனர்.

அவர்களது விடுதலை தொடர்பாக தமிழக அரசே முடிவு செய்யலாம் என உச்சநீதிமன்றத்தின் உத்தரவு பிறப்பித்தது. இதனையடுத்து, அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, ஆளுநருக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆளுநர் இன்னும் ஒரு முடிவும் எடுக்காத காரணத்தினால், 7 பேர் விடுதலையில் இழுபறி ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், சென்னை உயர்நீதிமன்றத்தில் நளினி தாக்கல் செய்த ஆள்கொண்வு மனுவில், அரசின் முடிவுக்கு பிறகும் தான் சட்டவிரோதமாகச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் என்றும், தன்னை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி விடுதலை செய்ய உத்தர விட வேண்டும் என்றும் கோரியிருந்தார்.

இந்த வழக்கில் மத்திய உள்துறை அமைச்சகம் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், ராஜீவ் கொலை வழக்கில் சிறையில் உள்ள 7 பேர் விடுதலை குறித்து ஆளுநர் முடிவு எடுக்கலாம். பேரறிவாளன் கருணை மனு மீதும் ஆளுநர் சுதந்திரமாக முடிவெடுக்கலாம். நளினி உள்ளிட்ட 7 பேரின் விடுதலை செய்வது தொடர்பாக தமிழக அரசின் பரிந்துரை கடந்த 2018 இல் நிராகரிக்கப்பட்டுவிட்டது. சட்டவிரோத காவலில் உள்ள நளினி, தாக்கல் செய்த ஆள்கொண்வு மனு விசாரணைக்கு உகந்தது அல்ல. இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது. இதனையடுத்து, இந்த வழக்கை வரும் 12 ஆம் திகதிக்கு உயர்நீதிமன்றம் ஒத்திவைத்தது.

# திருமாவளவனின் தேர்தல் வழக்கு; சென்னை நீதிமன்றம் தள்ளுபடி



கடந்த 2016ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழக சட்டமன்ற தேர்தலில் காட்டுமன்னார்கோவில் சட்டமன்ற தொகுதியில் அ.தி.மு.கவின் வேட்பாளராக போட்டியிட்ட முருகுமாறன் வெற்றி பெற்ற நிலையில் அவரது வெற்றியை எதிர்த்து விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் தொடர்ந்த மனு மீதான விசாரணை கடந்த சில ஆண்டுகளாக சென்னை உயர்நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

இந்த நிலையில் இந்த வழக்கின் இருதரப்பு வாதங்கள் முடிவடைந்து நேற்றுத் தீர்ப்பு அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி நேற்றுத் தீர்ப்பு அளிக்கப்பட்டது.2016ஆம் ஆண்டு தேர்தலில் காட்டுமன்னார்கோவிலில் அ.தி.மு.கவின் முருகுமாறன் வெற்றி பெற்றமை செல்லும் என்று தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டது.

மேலும் நிராகரிக்கப்பட்ட 102 தபால் வாக்குகளை ஆய்வு செய்யக்கோரி அ.தி.மு.கவின் எம்.எல்.ஏ. வெற்றிக்கு எதிராக திருமாவளவன் தொடர்ந்த மனுவை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikathir
சனிக்கிழமை 08.02.2020


# அல் கொய்தா தலைவர் அமெ. தாக்குதலில் பலி



வொஷிங்டன்,பெப்.08

அமெரிக்காவின் தாக்குதலில் அல் கொய்தா அமைப்பின் முக்கிய தலைவர் பலியானார் என வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

அமெரிக்கக் கடற்படைத் தளத்தைக் குறி வைத்து அல் கொய்தா பயங்கரவாத இயக்கம் தாக்குதல் நடத்திய நிலையில், அரேபிய தீபகற்பத்தில் அல் கொய்தா அமைப்பை நிறுவியவரும், அல் கொய்தா இயக்கத்தின் துணைத் தலைவருமான காசிம் அல் ரமி, அமெரிக்கா நடத்திய பதில் தாக்குதலில் கொல்லப் பட்டார் என வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

சவுதி அரேபியா மற்றும் ஏமனைக் களமாகக் கொண்டு கடந்த 2009 ஆம் ஆண்டு அல் கொய்தாவின் ஏ.கியூ.ஏ.பி. என்னும் பிரிவு தொடங்கப்பட்டது. அரேபிய பிராந்தியத்தில் அமெரிக்கா தலைமையிலான படைகள் உள்பட அனைத்து மேற்கத்திய நாடுகளின் ஆதிக்கத்தை முடிவுக்கு கொண்டு வருவதை நோக்கமாக கொண்டு இது இயங்கி வந்தது.

ரமி, ஏமனில் உள்ள அப்பாவி மக்கள் மீது வன்முறை தாக்குதல் நடத்தியவர் எனவும், அமெரிக்கா மற்றும் அமெரிக்கப் படைகள் மீது பல தாக்குதல்கள் நடத்த திட்டமிட்டிருந்தார் எனவும் வெள்ளை மாளிகை வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. எனினும், இந்தத் தாக்குதல் எப்போது, எந்தச் சூழலில் நடைபெற்றது என்பது பற்றி எந்த தகவலையும் டிரம்ப் கூறவில்லை.

# கொரோனா வைரஸ் உயிரிழப்பு எண்ணிக்கை 630 ஆக உயர்வு

பெய்ஜிங்,பெப்.08

சீனாவின் ஹுபெய் மாகாண தலைநகர் உகானில் இருந்து கடந்த டிசம்பர் மாத இறுதியில் பரவிய கொரோனா வைரஸ் தற்போது நாடு முழுவதும் அசுர வேகத்தில் பரவி வருகிறது.

இதனால் நாளுக்கு நாள் உயிரிழப்புகளும் அதிகரித்து வருகின்றன. குறிப்பாக சீனாவில் மிகப் பெரிய பாதிப்பை கொரோனா வைரஸ் ஏற் படுத்தியுள்ளது.

கொரோனா வைரஸின் பிறப்பிடமாகக் கருதப்படும் உகானில் இந்த வைரஸ் பாதிப்பால் மருத்துவமனைகள் அனைத்தும் நோயாளிகளால் நிரம்பி வழிகின்றன.



இந்நிலையில், சீனாவில் கொரோனா வைரஸ் தாக்கியதில் பலியானவர்களின் எண்ணிக்கை 630 ஆக உயர்ந்துள்ளதாக சீன அரசு அறி வித்துள்ளது. நேற்று முன்தினம் மட்டும் 69 பேர் உயிரிழந்தனர் என சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அதேபோல், 2,447 பேர் புதிதாக கொரோனா வைரஸ் நோய் தொற்றால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

817 க்கும் மேற்பட்டோர் குணமாகி வீடு திரும்பி இருக்கின்றனர் எனவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

# சிறுமி மலாலாவைத் தாக்கிய நபர் சிறையிலிருந்து ஓட்டம்!



இஸ்லமாபாத்,பெப்.08

பின்நாளில் அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவரும், கல்வி உரிமை ஆர்வலருமான மலாலா யூசுப்சாய் சிறுமியாக இருந்தபோது அவர் மீது தாக்குதல் நடத்திய பயங்கரவாதி இஷானுல்லா இஷான் பாகிஸ்தான் சிறையில் இருந்து தப்பியுள்ளார். பொவரில்– 2014 ஆம் ஆண்டு இராணுவப் பள்ளியில் நடத்திய தாக்குதலில் 132 பள்ளிக் குழந்தைகள் பலியான சம்பவத்திலும் தொடர்புடைய பயங்கரவாதியான அவர், சிறையில் இருந்து தப்பிய பின்னர் ஒலி நாடா ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

பாகிஸ்தான் சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவி வரும் அந்த ஒலிநாடாவில், பாகிஸ்தான் சிறையில் இருந்து கடந்த ஜனவரி 11 ஆம் திகதியே தான் தப்பி விட்டார் எனவும், 2017 ஆம் ஆண்டு தன்னை சரண் அடையுமாறு கூறிய போது அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற பாகிஸ்தான் பாதுகாப்பு படை தவறிவிட்டதாகவும் தெரிவித்துள்ளார். எனினும் தற்போது உள்ள இருப்பிடம் பற்றிய எந்த தகவலையும் இஷான் வெளியிடவில்லை.

பயங்கரவாதிகளின் மனித உரிமை மீறலுக்கு எதிராகவும் பெண் கல்விக்கு ஆதரவாகவும் குரல் கொடுத்து வந்த மலாலா யூசுப்சாய் மீது என்ற கடந்த 2012 ஆம் ஆண்டு தலிபான் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் படுகாயம் அடைந்த சிறுமி மலாலா, லண்டனில் உயர் சிகிச்சைக்கு பிறகு நலம் பெற்றார். பெண் கல்விக்காக தொடர்ந்து குரல் கொடுத்து வந்த மலாலா யூசுப்சாய்க்கு கடந்த 2014 ஆம் ஆண்டு சமாதானத்திற்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. 17 வயதில் மலாலா இந்த விருதைப் பெற்றார்.

# கொரோனோ வைரஸ் தொற்று: அமெ.– சீன அதிபர்கள் பேச்சு!



பெய்ஜிங்,பெப்.08

கொரோனோ வைரஸ் தொற்று உலகை அச்சுறுத்தி வரும் நிலையில், இவ்விவகாரம் குறித்து அமெரிக்க அதிபர் டிரம்புடன் சீன அதிபர் ஜி ஜின்பிங் தொலைபேசியில் ஆலோசனை நடத்தியுள்ளார்.

நாவல் கொரோனா வைரஸ் உலகம் முழுவதிலும் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ள சூழலில், சீன அதிபர் ஜி ஜின்பிங் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் இருவரும் ஆலோசனை நடத்தியுள்ளனர்.

தொலைபேசியில் டிரம்புடன் பேசிய ஜி ஜின்பிங், கொரோனா வைரஸ் தொற்றை முற்றிலும் ஒழிக்க முடியும் என்ற நம்பிக்கையும் திறனும் சீனாவிடம் உள்ளது எனத் தெரிவித்தார் என சீன அரசு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. மேலும், இந்த கொடிய வைரஸ் தொற்றை எதிர்த்து போராடுவதில் எந்த ஒரு முயற்சியையும் சீனா விட்டு வைக்காது எனவும் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன் அமெரிக்காவின் மாகாண கூட்டுக் கூட்டத்தில் பேசிய அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், கொரோனா வைரஸை ஒழிக்க சீனாவுடன் இணைந்து போராடுவதற்கு அமெரிக்கா தயாராக உள்ளது என்று கூறினார். தொடர்ந்து பேசிய அவர், வைரஸ் பாதிப்புக்கு ஆளான அனைவருக்காகவும் கடவுளை பிரார்த்திக்கிறேன் என்றும் மருத்துவத்துறையில் அமெரிக்கா சாதித்து வருவது எல்லோரும் அறிந்த ஒன்றே என்றும் தெரிவித்து இருந்ததமை நினைவுகூரத்தக்கது.

# கொரோனா வைரஸ் பற்றி எச்சரித்த டாக்டரும் கூட அதற்குப் பலியானார்

உலகம் முழுவதும் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ள கொரோனா வைரஸ் நோய் தொற்றுக் குறித்து முதன் முதலில் எச்சரித்த சீன மருத்துவர், அதே வைரஸ் தாக்கி உயிரிழந்துள்ளார்.

உகானில் உள்ள மருத்துவமனையில் பணியாற்றி வந்த மருத்துவரான லி வென்லியாங், கடந்த ஆண்டு டிசம்பர் 30 ஆம் திகதிக்கு முன்பாகவே, உகானில் சார்ஸ் போன்ற புதிய வைரஸ் பரவுவதாக தனது நண்பர்களிடமும், சமூக வலைத்தளங்களிலும் பகிர்ந்து இருந்தார். ஆனால், லீ வென்லியாங்கிற்கு சம்மன் விடுத்த சீனப் பொலிஸார், இது போன்ற வதந்திகளைப் பரப்புவதை நிறுத்த வேண்டும் என்று எச்சரித்து இருந்தனர்.

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளித்து வந்த



மருத்துவர் லி வென்லியாங்கும், அதே வைரஸால் பாதிக்கப்பட்டார். சீனாவில் இணைய பயன்பாட்டாளர்கள் மத்தியில் கதாநாயகனாக கொண்டாடப்பட்டு வந்த லி வென் லியாங், சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழந்தார் என சீன அரசு செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

# இத்தாலியில் ரயில் தடம் புரண்டதில் 2 சாரதிகள் பலி; 30 பயணிகள் காயம்

ரோம்,பெப்.08

இத்தாலியில் ரயில் தடம் புரண்டதில் 2 பேர் பலியாகினர்.

இத்தாலியின் மிலனில் இருந்து துறைமுக நகரான சலேர்னாவுக்கு பயணிகள் ரயில் புறப்பட்டு சென்றது. அதில் நூற்றுக்கும் மேற்பட்ட பயணிகள் இருந்தனர்.

இந்த ரெய்ல் மிலன் நகரில் இருந்து 50 கி.மீ. தொலைவில் உள்ள லோடி நகருக்கு அருகே அதிவேகத்தில் சென்று கொண்டிருந்த போது சற்றும் எதிர்பாராத வகையில் திடீரெனத் தடம் புரண்டது. ரயிலின் என்ஜின் மற்றும் அதன் பின்னால் இருந்த 2 பெட்டிகள் தண்டவாளத்தை விட்டு விலகி, கவிழ்ந்தன.

இந்த கோர விபத்தில் ரயில் சாரதிகள் 2 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் தடம் புரண்ட 2 பெட்டிகளில் இருந்த 30க்கும் மேற்பட்ட பயணிகள் காயம் அடைந்தனர்.

விபத்தைத் தொடர்ந்து, தீயணைப்பு வீரர்கள் மற்றும் மீட்பு குழுவினர் விரைந்து சென்று கவிழ்ந்து கிடந்த ரெயில் என்ஜின் மற்றும் 2 பெட்டிகளை கிரேன் மூலம் தூக்கி நிறுத்தினர். பின்னர் படுகாயம் அடைந்தவர்களை மீட்டு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர்.



காலைக்கதிர் Kalaikathir



# சைவர்கள் வாழும் இடமெங்கும் தைப்பூச திருநாளில் வழிபாடு!



தைப்பூசம். பல ஆன்மிக அற்புதங்கள் நிறைந்த புண்ணிய தினம் இது. முதன் முதலாக நீரும், அதிலிருந்து உலகமும் தோன்றியது தைப்பூசத்தன்றுதான் என்கின்றன புராண நூல்கள்.

சூரபதுமனை அழிக்க ஸ்ரீ முருகப்பெருமானுக்கு பிரம்மவித்யா சொரூபமான வேலாயுதத்தை சக்திதேவி தந்ததும் இந்த நாளில்தான்.

பழநி முதலாக முருகன் திருத்தலங்கள் தைப்பூசம் வெகுவிசேம்.

தாமிரபரணியின் கரையில் தவமிருந்த ஸ்ரீகாந்திமதிக்கு நெல்லையப்பர் அருள்பாலித்த திருநாளும் இதுவே. தைப்பூசத்தன்று நெல்லைப்பர் கோயில் விழாக்கோலம் காணும்.

திருஞானசம்பந்தர் மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலில் தைப்பூசத்தை குறிப்பிட்டு பதிகம் பாடியிருக்கிறார். இங்கு தைப்பூசத்தை ஒட்டிய பௌர்ணமியன்று நடக்கும் தெப்பத்திருவிழாவில் சிவபார்வதியுடன், சிங்காரவேலரும் எழுந்தருளுகின்றார். அன்று கபாலீஸ்வரருக்குத் தேன் அபிஷேகம் செய்யப்படும். தைப்பூசத் திருநாளில்தான் திருஞானசம்பந்தர் பதிகம் பாடி, பூம்பாவையை உயிர்பித்தார் என விவரிக்கிறது மயிலாப்பூர் தலபுராணம்.

பூச நட்சத்தரத்தின் பிரதான தேவதை குரு பகவான். ஆகவே, தைப்பூசத்தன்று புனித தீர்த்தங்களில் நீராடி குருவை வழிபடக் கல்வி ஞானம் பெருகும்.

1872 இல், தைப்பூசத்தன்று வள்ளலார் வடலூரில் ஜோதி தரிசனத்தைத் துவக்கினார். அன்றிலிருந்து தற்போது வரையில் இவ்விழா இங்கு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

வள்ளாலர் ஜோதியில் கலந்தும் ஒரு தைப்பூசத்தில்தான். தைப்பூசத்தன்று மட்டுமே ஞான சபையில் ஏழு திரைகள் விலகிய நிலையில், ஜோதி தரிசனம் காண முடியும். அன்று காலை 6.30 மணி, 10 மணி, மதியம் 1 மணி, இரவு 7 மற்றும் 10 மணி, மறுநாள் காலை 5.30 மணி என ஆறு நேரங்களில் ஏழு திரைகளும் நீக்கப்படும். மாத பூசம் நட்சத்திர நாட்களில் இரவு 8 மணிக்கு, ஆறுதிரைகளை மட்டும் விலக்கி, மூன்று முறை ஜோதி தரிசனம் காட்டுவர்.

## தை பூசம் கொண்டாடும் ஒரே வைணவத்தலம்

தைப்பூசம் சிவபெருமானுக்கும் முருகப் பெருமானுக்கும் மிகவும் விசேமாக கொண்டாடப்பட்டாலும், ஒரு வைணவத் தலத்திலும் தைப்பூசம் விசேமாகக் கொண்டாடப்படுகிறது. அந்தத் தலம் 108 திவ்யதேசங்களில் ஒன்றான திருச்சேறை சாரநாதப்பெருமாள் கோயிலாகும். இத்தலம் கும்பகோணத்திலிருந்து திருவாரூர் செல்லும் வழியில் உள்ளது.



இங்கு காவேரி அன்னை மகாவிஷ்ணுவை நோக்கத் தவமிருக்கிறாள். தை மாதம் பூச நட்சத்திரத்தன்று தான் காவிரிக்கு நேரே காட்சி கொடுத்து வரம் அளித்தார். ஸ்ரீஹரி முதல் எட்டுநாள்கள் தினமும் காலையில் பல்லக்கிலும், மாலையில் எல்லா வாகனத்திலும், வேத திவ்யப் பிரபந்த கோஷ்டியுடன் உற்சவம் நடக்கும். தைப்பூசத்தன்று (ஒன்பதாவது நாள்) மிகச் சிறப்பாக பெரிய தேரில் ஊர்வலம் வருவார்.



## தைப்பூசத்தின் பிற சிறப்புகள்

தை மாத பௌர்ணமியன்று பூச நட்சத்திரமும் சேர்ந்து வரும் நாளான தைப்பூசம் தமிழர்களால் மிகச் சிறந்த நாளாகக் கருதப்பட்டு கொண்டாடப்பட்டு வருகிறது. தைப்பூசம் முருகனுக்கு உரியது என்றாலும், சைவர்கள் அனைவருக்குமே இது பொது விழாவாகும். அன்றைய தினம் அதிகாலையில் எழுந்து நீராடி, திருநீறு, உருத்திராட்சம் அணிந்து, தேவார திருவாசகப் பதிகங்கள் சொல்லி, ஒருவேளை பால், பழங்கள் மட்டும் உண்டு, மாலை கோயிலுக்குச் சென்று வழிபட்டால் சகல சௌபாக்கியங்களும் கிடைக்கும்.



இந்த நாளில்தான் முருகன் தாரகாசுரனை அழித்தார். சிவனும் பார்வதியும் ஒரு முறை தனியாகப் பேசிக் கொண்டிருந்தபோதுகுழந்தை முருகன் அதைத் தெரியாமல் கேட்டுவிட்டார். இதனால் கோபமடைந்த பார்வதி முருகனை கோபித்துக் கொண்டார். பெற்றோரின் கோபம் தீர முருகன் திருப்பரங்குன்றத்தில் கடுந்தவம் இயற்றியதால் சிவன், பார்வதி மனமிரங்கி கோபம் தணிந்த நாளே தைப்பூசம் என்று சிலர் கூறுவர்.

தைப்பூச விழா தமிழகம் மட்டுமல்லாமல் சிங்கப்பூர், மலேசிய, மியான்மர், இலங்கை ஆகிய நாடுகளிலும் கொண்டாடப்படுகிறது.

இலங்கையில் தைப்பூசத்தன்று வீட்டை நன்கு சுத்தம் செய்து, வயலில் விளைந்த புது நெல்லைக் குத்தி அரிசியாக்கி அதனை சாதமாக வடித்து அதோடு பால், பழங்கள், சர்க்கரை சேர்த்து இறைவனுக்குப் படைத்து தாங்களும் உண்ணுகிறார்கள்.




இங்கு யாழ்ப்பாணத்தில் உள்ள நல்லூர் கந்தசாமி கோயிலில் தைப்பூச விழா மிகவும் சிறப்பாககொண்டாடப்படுகிறது. இவ்விழாவில் பங்கேற்கும் பக்தர்களில் கிறிஸ்துவர்களும் இஸ்லாமியர்களும் கூட உண்டு என்பது இதன் சிறப்பு.

மலேசியாவின் தலைநகரமான கோலாலம்பூருக்கு அருகில் இருக்கும் பத்து மலை எனும் பட்டு குகைகளில் தைப்பூச விழா மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது. பல லட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்கும் இந்த விழாவைக் கண்டுகளிக்கவே பல்லாயிரக் காணக்கில் சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். கோலாலம்பூரில் இருக்கும் மகாமாரியம்மன் கோயிலிலிருந்து ஊர்வலம் புறப்படுகிறது. பக்தர்கள் பலவகையான காவடிகளை ஏந்தி சுமார் 15 கி.மீ. நடந்து பட்டுக் குகையை அடைகிறார்கள். அங்கு நடப்பட்டிருக்கும் வேல்தான் மிக முக்கியமான வழிபாட்டுச் சின்னம் . பக்தர்கள் 272 படிகள் ஏறி வந்து கந்தனை தரிசித்து பக்திப் பெருக்கோடு வழிபட்டு இறை அருள் பெற்றுச் செல்கிறார்கள்.

சிங்கப்பூரில் தண்டாயுதபாணி சுவாமி கோயிலில் தைப்பூசம் மிகவும் விசேம். இதன் சிறப்பம்சம் என்னவென்றால் தைப்பூசத்துக்கு முதல் நாள் முருகன் வெள்ளிரதத்தில் லயன்சித்தி விநாயகர் கோயிலுக்கு எழுந்தருளுகிறார். அன்றும் காவடிகள் எடுக்கப்படுகின்றன. இதை செட்டிப்பூசம் என்று அழைக்கிறார்கள்.

தைப்பூச விழா தமிழ்நாட்டில் அறுபடை வீடுகளிலும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டாலும் பழநியில் நடைபெறும் தைப்பூச விழாவே மிக விசேமானதாகக் கருதப்படுகிறது. காரணம் அகத்தியரின் சீடரான இடும்பனே காவடி எடுக்கும் வழிபாட்டினை முதலில் தொடங்கி வைத்தவன் என்றும், அவன் முருகனால் ஆள்கொள்ளப்பட்ட இடம் பழநியே என்றும் கூறுகிறது புராணம் . பழநியில் தைப்பூசம் பத்து நாள் திருவிழாவாக வெகு விமரிசையாக கொண்டாடப்படுகிறது. முருகனுக்கு நேர்த்திக்கடன் செலுத்துபவர்கள் பெரும்பாலும் காவடி எடுப்பதாக வேண்டிக்கொள்கின்றனர்.

**தைப்பூசத்திருநாளில் முருகனை வணங்குவோம்!**
**நலம் பல பெறுவோம்!!**



# தேர்தல்களை இலக்குவைத்தே மாவட்டச் செயலர்கள் மாற்றம்

## சரவணபவன் எம்.பி. நாடாளுமன்றில் தெரிவிப்பு



கொழும்பு, பெப். 08

வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டச் செயலர்களையும் அவசரமாக மாற்றுவதற்கு இந்த அரசாங்கம் முன்னெடுப்புக்களைச் செய்துள்ளது. இரண்டு மாவட்டச் செயலர்கள் ஏற்கனவே மாற்றப்பட்டு அவர்களுக்குப் பதிலாக இருவர் நியமிக்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் சிங்களவர். இவ்வாறிருக்கையில் ஏனையவர்களையும் கூண்டோடு மாற்றும் செயற்பாடானது தேர்தல்களை இலக்கு வைத்த நகர்வென்றே நாம் சந்தேகிக்க வேண்டியுள்ளது - இவ் வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுத் தேர்தல் நெருங்கவுள்ள நிலையில் இந்த மாவட்டச் செயலர்களின் மாற்றமானது தேர்தல் வெற்றியை இலக்கு வைத்து பொம்மை அரசொன்றை நடத்துவதற்கான அரசின் திட்டமிட்ட நடவடிக்கையாகவே கொள்ளவேண்டியுள்ளது. இதன் மூலம், தமக்கான வாக்கு வங்கியைப் பலவந்தமாக உருவாக்கலாம் என்றும், தாம் நினைத்தபடி வடக்கு மாகாணத்தை ஆட்டி வைக்கலாம் எனவும் இந்த அரசு எண்ணுகின்றது.

இந்த அடக்குமுறைகளைத் தமிழ் மக்கள் கவனித்துக் கொண்டுதான் உள்ளனர். நிச்சயமாக எதிர்வரும் பொதுத் தேர்தலில் அவர்கள் ஓரணியில் திரளத்தான் போகின்றார்கள். "ஒற்றுமைக்குத் தேவை பொது எதிரி" என்பது இயற்கையின் நியதி. அது எமக்கு விதிவிலக்கல்ல. இந்த அரசின் அடக்குமுறைகளையும் அழுத்தங்களையும் தாங்கித்தாங்கி இனிமேலும் முடியாது என்ற நிலையில் தமிழ் மக்கள் உள்ளனர்.

அவர்கள் எதிர்வரும் தேர்தலில் ஓரணியில் திரளும்போது கடந்த ஜனாதிபதித் தேர்தலை விட மேலும் சிறப்பானதொரு பாடத்தை நீங்கள் விளங்கிக் கொள்வீர்கள்.

கூட்டமைப்பின் இமாலய வெற்றி உங்களுக்கு சிம்மசொப்பனமாக இருக்கும். உங்கள் (ராஜபக்ஷக்களின்) ஆட்சியில் தமிழர்களின் மீது அளவற்ற அடக்குமுறைகள் தற்போதும் வலிந்து திணிக்கப்படுகின்றன என்பதற்கு சர்வதேசத்துக்குத் தேவைப்படும் சாட்சியாகவும் அது அமையும்.

கூட்டமைப்பு 22 ஆசனங்களையும் பெறுவதற்காக பாடுபடும் இந்த அரசுக்கு தமிழ் மக்கள் சார்பில் நன்றிதான் சொல்ல வேண்டும்.

இந்த அரசு ஒன்றைவிளங்கிக் கொள்ள வேண்டும். அடக்குமுறைகள் அதிகரிக்கும் ஒவ்வொரு கணமும் அதை உடைத்தெறியும் ஓர்மம் இயல்பாகவே மனிதர்களுக்குண்டு, அந்த ஓர்மம் தமிழர்களுக்கு இன்னும் அதிகமாகவே உள்ளது. நீங்கள் என்னதான் எம்மீது இப்படியான திணிப்புக்களை மேற்கொண்டாலும், அவை எவ்விதத்திலும் அரசுக்குப் பயனளிக்கப்போவதில்லை என்பதே திண்ணம் - என்றார். (ஐ)

## தமிழ்த் திரைத்துறைப் படைப்பாளி முல்லை யேசுதாஸன் காலமானார்



முல்லைத்தீவு, பெப். 08

போராட்டக் காலத்தில் திரைப்படத் துறையில் ஏராளனமான குறும்படங்களை இயக்கியவரும் பெருமளவான முழு நீள மற்றும் குறும்படங்களில் பிரதான கதாபாத்திரங்களை ஏற்று நடித்தவரும் எழுத்தாளருமான முல்லை யேசுதாஸன் மாரடைப்பால் காலமானார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவர் பணியாற்றும் அலுவலகத்தில் இருந்து நேற்று முன்தினம் முல்லைத்தீவு கள்ளப்பாட்டில் உள்ள தனது இல்லத்துக்குச் சென்றிருந்த அவர் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் மாரடைப்பால் அவதியுற்ற நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது இடைநடுவே உயிர் பிரிந்ததாக குடும்பத்தினர் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த யேசுதாஸன் சாமி ஐயா என்று துறை சார்ந்தவர்களால் அறியப்பட்டு வந்தார். அவர் 90களில் இருந்து இன்றுவரை ஏராளமான குறும்படங்களில் நடித்திருந்தார்.

பெருமளவான சிறுகதைகளை எழுதியுள்ள அவர் 'நீலமாகிவரும் கடல்' சிறுகதைத் தொகுப்பினை வெளியிட்டிருந்தார்.

தற்போது தனியார் தொலைக்காட்சி ஒன்றில் பணியாற்றிவந்த அவர் அந்தத் தொலைக்காட்சியில் மண்வாசனை சார்ந்த படைப்புக்களை வெளிப்படுத்திவந்தார்.

தென்னிந்தியாவின்பிரபல இயக்குநர் மகேந்திரன், சமாதான காலத்தில் கிளிநொச்சிக்குப் பயணம் மேற்கொண்டிருந்தபோது அங்கு மேற்கொண்ட சினிமா சார்ந்த களப் பயிற்சிகளின்போதும் குறும்படங்கள் உருவாக்கத்தின்போதும் பிரதி சார்ந்த பங்களிப்புக்களை நல்கியதுடன் நடித்தும் இருந்தார்.

இதேவேளை, முல்லை யேசுதாஸனின் மகன் ஒருவர் போரில் உயிர் துறந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புதிய கூட்டணியை சீர்குலைக்க முயற்சி

### சஜித் தரப்பினர் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 08

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் உருவாக்கப்படவுள்ள புதிய கூட்டணியைச் சீர்குலைக்கச் சிலர் முனைகின்றனர் என அவருக்கு ஆதரவான ஐ.தே.க. உறுப்பினர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அதாவது ஐக்கிய தேசியக்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆதரவாளர் குழுவே இந்த நாசவேலை நடவடிக்கையைத் தொடங்கியுள்ளதாக சஜித் தரப்பு கூறுகின்றது.

தற்போது புதிய கூட்டணி மற்றும் அந்தக் கூட்டணியின் பெயர் ஆகியவற்றைப் பதிவு செய்ய சஜித்தின் கட்சி முடிவு செய்துள்ளது. ஆனால் யானைச் சின்னத்தின் கீழ் அடுத்த தேர்தலில் போட்டியிட ரணில் முடிவு செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 5 ஆம் திகதி நடைபெறவிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டது. அந்தக் கூட்டத்திலேயே புதிய கூட்டணியின் பெயர் மற்றும் கையொப்பம் குறித்து அறிவிக்க சஜித் தரப்பு திட்டமிட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது. (ஐ)

## ஜனாதிபதி கோட்டாக்கு நன்றி சொன்னது சீனா

கொழும்பு, பெப்.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் சீனா பாதிக்கப்பட்டபோது, இலங்கை அளித்த ஆதரவுக்கு சீனா நன்றி தெரிவித்துள்ளது.

சீன வெளியுறவு அமைச்சகத்தின் தகவல்துறை துணை இயக்குநர் ஜெனரல் லிஜியன் ஜாவோ நேற்று முன்தினம் ருவிட்டரில் உலக தலைவர்களுக்கு நன்றி தெரிவித்தார். சீனாவுக்கு ஆதரவாக இருந்த நாடுகளுக்கு தொடர் ருவிட்களில் நன்றி தெரிவித்தார்.

உலகத்தலைவர்களின் ஆதரவுக்கு எங்கள் மனமார்ந்த நன்றி. இலங்கையின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, கஷ்டத்தையும் துயரத்தையும் பகிர்ந்துகொள்ளும் ஒரு உண்மையான நண்பராக, அவரது நாடு சீனாவுடன் உறுதியாக நின்றது எனக் குறிப்பிட்டார்.

மாலைதீவு, பாகிஸ்தான், மியான்மர், குரோஷியா, இத்தாலி, நைஜீரியா மற்றும் கம்போடியா ஆகியவையும் சீனாவின் நன்றியை பெற்ற நாடுகளில் அடங்குகின்றன. (ஐ)

## வெடி பொருள்களுடன் கிழக்கில் இருவர் கைது

மட்டக்களப்பு, பெப். 08

மட்டக்களப்பு - ஓட்டமாவடி பகுதியில் வெடிபொருள்களுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஓட்டமாவடி - இரண்டாம் குறிச்சியில் ஒருவரும், வாழைச்சேனை - ஆலிம் வீதியில் ஒருவரும் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத்தகவலின் அடிப்படையில் அந்த இருவரிடம் இருந்து டெட்டனேட்டர்கள், வயர்கள் உட்பட பல பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றனஎனவும், சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகவும் பொலிஸார் கூறினர். (ஐ)

## நல்லாட்சியில் அமைச்சர்களின் வாகனங்களுக்கு ரூ. 280 கோடி

கொழும்பு, பெப். 08

நல்லாட்சி அரசின் காலத்தில் அமைச்சர்களுக்கான வாகனக் கொள்வனவுக்குச் செலவான நிதி விவரத்தை அரசு வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சியின் பிரதம கொறடா நேற்று இதனை தெரிவித்தார்.

2015ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியில் இருந்து இதுவரை அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்களுக்கான வாகன கொள்வனவுக்கு 280 கோடி ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

## வசந்த கரன்னகொடவுக்கு 3 ஆவது தடவை அழைப்பு

கொழும்பு

இளைஞர்கள் 11 பேர் கடத்தப்பட்டமை தொடர்பில் முன்னாள் கடற்படைத்தளபதி வசந்த கரன்னகொடவுக்கு 3ஆவது தடவையாக விசேடமேல் நீதிமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

கடந்த 2008 - 2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் கொழும்பு - கொட்டாஞ்சேனை மற்றும் தெஹிவளைப் பகுதிகளில் 5 தமிழ் மாணவர்கள் உட்பட 11 பேர் வெள்ளை வானில் கடத்திச் செல்லப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட விவகாரம் தொடர்பாக விசாரணை மேற்கொள்வதற்காகவே முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொடவுக்கு இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikathir





# புஷ் பையர் கிரிக்கெட் பேஷ்: நட்சத்திர வீரர்களின் அணி விவரம் அறிவிப்பு!

புஷ்பையர் கிரிக்கெட் பேஷ் கிரிக்கெட் போட்டியில் விளையாடும் இரு அணிகளின் விவரங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஆஸ்திரேலியாவையே நிலைகுலைய வைத்த காட்டுத் தீயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் ஈட்டுவதற்காக நட்சத்திர வீரர், வீராங்கனைகளை இணைத்து கிரிக்கெட் போட்டியொன்று நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் போட்டியில் ஆஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் ஜாம்வான்களான ரிக்கி பொண்டிங் ஓர் அணியையும், கில் கிறிஸ்ட் ஓர் அணியையும் வழிநடத்துகின்றனர்.

இந்த நிலையில் இப்போட்டியில் விளையாடும் இரு அணிகளின் விவரங்களையும் கிரிக்கெட் ஆஸ்திரேலியா வெளியிட்டுள்ளது.

இந்த அணியை பொறுத்தவரை எலீஸ் வில்லானி மற்றும் போப் லிட்ச்பீல்ட் போன்ற கிரிக்கெட் வீராங்னைகள் இடம் பெற்றுள்ளனர்.

அதேபோல, ஆஸ்திரேலியன் ரூல்ஸ் உதைபந்து விளையாட்டு வீரர் நிக் ரிவோல்ட்டும் இந்த போட்டியில் விளையாடுகிறார்.

இதில் ரிக்கி பொண்டிங் தலைமையிலான பதினொருவர் கொண்ட அணிக்கு ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் பயிற்சியாளராக உள்ளார்.

ரிக்கி பொண்டிங் தலைமையிலான அணியில், மத்தியூ ஹைடன், ஜஸ்டின் லாங்கர், எலீஸ் வில்லானி, பிரையன் லாரா, போப் லிட்ச்பீல்ட், பிரெட் ஹெடின், பிரெட் லீ, வசிம் அக்ரம், டேன் கிறிஸ்டியன், லுக் ஹொட்ஜ் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

கில் கிறிஸ்ட் தலைமையிலான அணியில், ஷேன் வொட்சன், பிரெட் ஹொக், யுவராஜ் சிங், அலெக்ஸ் பிளெக்வெல், ஹென்ரிவ் சைமன்ஸ், கோர்ட்னி வோல்ஷ், நிக் ரிவோல்ட், பீட்டர் சிடில், பவாட் அஹமட், ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இந்த அணிக்கு ஆஸ்திரேலிய டெஸ்ட் கிரிக்கெட் அணியின் தலைவர் டிம் பெய்ன் தலைமை தாங்குகிறார்.

நட்சத்திர வீரர்கள் பங்கேற்கும் நிவாரணப்போட்டி, இன்று பிக் பேஷ் லீக் இறுதிப் போட்டிக்கு முன்னர், சிட்னி கிரிக்கெட் மைதானத்தில் நடத்த திட்டமிடப்பட்டது.

ஆனால், தற்போது சிட்னியில் இன்று சனிக்கிழமை 50 மில்லி மீற்றர் மழை பெய்யும் என்று கணிக்கப்பட்டதால் அந்த நிவாரணப் போட்டி, நாளை மெல்போர்னில் உள்ள ஓவல் மைதானத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

அத்தோடு, இந்தப் போட்டியிலிருந்து முக்கிய நட்சத்திர வீரர்களும் விலகியுள்ளனர். ஜாம்பவான் ஷேன் வோர்ன் அணியிலிருந்து விலக ஆடம் கில்கிறிஸ்ட் அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்தோடு, மைக்கேல் ஹஸ்ஸி, மைக்கேல் கிளார்க், பிரிஸ்பேன் ஹீட் பிளேயர் கிரேஸ் ஹாரிஸ், மற்றும் என்.ஆர்.எல். ஜாம்பவான் பிராட் பிட்லர் ஆகியோரும் இப்போட்டியிலிருந்து விலகியுள்ளனர்.

ஆஸ்திரேலியாவில் கடந்த செப்டம்பர் மாதத்திலிருந்து எரியும் காட்டுதீயால் குறைந்தது 30 பேர் உயிரிழந்துள்ளனர்;. மேலும் 2000 பேர் தங்கள் வீடுகளை இழந்துள்ளனர்.

ஒரு கோடி ஹெக்டர் நிலப்பரப்பு தீக்கு இரையானது. மேலும், சுமார் ஒரு பில்லியன் விலங்குகள் உயிரிழந்திருக்கலாம் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் குறித்த காட்டுத்தீயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் இந்த போட்டி நடைபெறுகின்றது. இப்போட்டியில் கிடைக்கும் வருமானம் பாதிக்கப்பட்டவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும்

# லண்டன் அரை மரதனோட்டத்தில் மோ பராஹ் பங்கேற்கமாட்டார்?

லண்டன் அரை மரதனோட்டத்தில் முன்னாள் ஒலிம்பிக் சம்பியனான இங்கிலாந்தின் மோ பராஹ் பங்கேற்கமாட்டார் எனக் கூறப்படுகின்றது.

உபாதை காரணமாகவே அவர் இந்தப் போட்டியில் பங்கேற்க மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புகழ்பெற்ற லண்டன் அரை மரதனோட்டம் அடுத்த மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த மரதனோட்டத்தில் மோ பாரா பங்கேற்பது உறுதியாகியிருந்தது.

எவ்வாறாயினும் உபாதை காரணமாக லண்டன் அரை மரதனோட்டத்தில் மோ பராஹ் பங்கேற்பதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

கடந்த 2 வருடங்களில் நடத்தப்பட்ட லண்டன் அரை மரதனோட்டத்தில் மோ பராஹ் சம்பியனாகியிருந்தார்.

மோ பாரா, 5000 மற்றும் 10 000 மீற்றர் ஓட்டப்போட்டிகளில் உலக சாதனையாளராக திகழ்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.




# இறுதிப் போட்டிக்குள் முன்னேறிய மெல்போர்ன்

பிக் பேஷ் ரி-20 தொடரின், செலன்ஞர் போட்டியில் மெல்போர்ன் ஸ்டார்ஸ் அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

மெல்போர்ன் விளையாட்டு மைதானத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், மெல்போர்ன் ஸ்டார்ஸ் அணியும், சிட்னி தண்டர் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மெல்போர்ன் ஸ்டார்ஸ் அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய மெல்போர்ன் ஸ்டார்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில், 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 194 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, மார்கஸ் ஸ்டொயினிஸ் 83 ஓட்டங்களையும், நிக் லார்கின் ஆட்டமிழக்காது 83 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

சிட்னி தண்டர் அணியின் பந்துவீச்சில், கிறிஸ் மோறிஸ் 4 ஓவர்கள் வீசி 30 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதனைத் தொடர்ந்து 195 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய சிட்னி தண்டர் அணியால், நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 166 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது.

இதனால், மெல்போர்ன் ஸ்டார்ஸ் அணி 28 ஓட்டங்களால் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குள் அடியெடுத்து வைத்துள்ளது.

இதன்போது சிட்னி தண்டர் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, அலெக்ஸ் ரோஸ் 58 ஓட்டங்களையும், அர்ஜுன் நாயர் 30 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

மெல்போர்ன் ஸ்டார்ஸ் அணியின் பந்துவீச்சில், ஹறிஸ் ரவூப் 3 விக்கெட்டுகளையும், நாதன் குல்டர் நைல் மற்றும் ஆடம் செம்பா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 49 பந்துகளில் 3 சிக்ஸர்கள் 9 பவுண்ரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 83 ஓட்டங்களை பெற்றுக் கொண்ட நிக் லார்கின் தெரிவு செய்யப்பட்டார்.

இதற்கமைய 2019 - 2020ஆம் ஆண்டு பருவக்கால மகுடத்திற்கான இறுதிப் போட்டியில், மெல்போர்ன் ஸ்டார்ஸ் அணி, சிட்னி சிக்ஸர்ஸ் அணியை எதிர்கொள்ளவுள்ளது. இப்போட்டி நாளை சிட்னி கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

சிட்னி சிக்ஸர்ஸ் அணி இதற்கு முன்னதாக 2011 - 2012 பருவக்காலத்தில் அதாவது முதலாவது அத்தியாயத்திலேயே சம்பியன் பட்டம் வென்றது.

இதுதவிர, 2014 - 2015 பருவக்காலத்திலும்,



2016 - 2017 பருவக்காலத்திலும் இரண்டாம் இடம் பிடித்துள்ளது.

இதேபோல, மெல்போர்ன் ஸ்டார்ஸ் அணி, 2015 - 2016 பருவக்காலத்திலும், 2018 - 2019 பருவக்காலத்திலும் இரண்டாம் இடம் பிடித்துள்ளது.

# முதல் தடவையாகச் சர்வதேசத் தொடரொன்றில் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது பங்களாதேஷ்




முதல் தடவையாக சர்வதேசகிரிக்கெட் தொடரொன்றில் பங்களாதேஷ் அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

அந்தவகையில், 19 வயதுக்குட்பட்ட உலகக் கிண்ண ஒருநாள் தொடரில் பங்களாதேஷ் அணி நியூஸிலாந்து அணியை வெற்றி கொண்டு இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது.

தென்னாபிரிக்காவின் சென்வெஸ் பார்க்கில் உள்ள மைதானத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய நியூஸிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 211 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இந்நிலையில், 212 என்ற இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 44.1 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதன் மூலம் 6 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இந்த 19 வயதுக்குட்பட்ட உலகக் கிண்ண ஒருநாள் தொடரில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றுள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் 9 ஆம் திகதி நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் இந்திய அணியை பங்களாதேஷ் அணி எதிர்கொள்ளவுள்ளது.

## திருக்கேதீஸ்வர அலங்கார வளைவை தற்காலிகமாக அமைப்பதற்கு அனுமதி



மன்னார், பெப். 08

மன்னார் – திருக்கேதீஸ்வர அலங்கார வளைவை தற்காலிகமாக அமைக்க மன்னார் மேல் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

மன்னார் – திருக்கேதீஸ்வர அலங்கார வளைவு தொடர்பான வழக்கானது நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை மன்னார் மேல் நீதிமன்ற நீதிவான் எம்.சஹாப்தீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள் எப்பட்டது.

இதன்போது, மாந்தை ஆலய நிர்வாகத்தினரும் திருக்கேதீஸ்வர நிர்வாகத்தினரும் இணக்கப்பாடு ஒன்றுக்கு வந்தமைக்கு அமைவாக எதிர்வரும் சிவராத்திரியை முன்னிட்டு எதிர்வரும் 19 ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதி மாலை வரை அந்தப் பகுதியில் தற்காலிக அலங்கார வளைவு அமைப்பதற்கான அனுமதியைமன்னார்மேல்நீதிமன்றம்வழங்கியுள்ளது.

கடந்த தவணையின்போது, சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனினால் சிவராத்திரியை முன்னிட்டு தற்காலிக வளைவு அமைப்பது குறித்து அறிவிக் கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் அந்த விடயம் தொடர்பாக விசேட அவதானம் செலுத்திய மேல் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் நல்லிணக்க அடிப் படையில் – இரு நிர்வாகத்தினரின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் – தற்காலிகமாக அந்த வளைவை அமைப்பதற்கான அனுமதியை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தமிழர்கள் மீதான சோதனை உடன் நிறுத்தப்படவேண்டும்

## சிவசக்தி ஆனந்தன் வலியுறுத்து



கொழும்பு, பெப். 08

வடக்கில் ஏ 9 வீதியில் அமைக்கப்பட்டுள்ள இராணுவச் சோதனைச் சாவடிகளை உடனடியாக அகற்றி தமிழ் மக்கள் மீதான சோதனைகளை நிறுத்தவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன் தினம் வியாழக் கிழமை விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

யாழ். ஏ 9 வீதியில் 10 இற்கும் மேற்பட்ட இராணுவச் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. அதில் மூன்றுக்கும்மேற்பட்ட சோதனைச்சாவடிகளில்பயணிகள் வாகனங்கள் தடுத்து நிறுத்தப்பட்டு மக்கள் இறக்கப்பட்டு சோதனையிடப்படுகின்றனர்.

கஞ்சா, குடு என்ற பெயரில் தமிழ் மக்கள் வீதிகளில் இறக்கப்பட்டு தொல்லைப்படுத்தப்படுகின்றமையை அனுமதிக்க முடியாது. அத்துடன் இந்தச் சோதனைச் சாவடிகளில் பெண் பொலிஸாரோ, பெண் சிப்பாய்களோ இல்லை. இதனால் தமிழ்ப் பெண்கள் பெரும் அசௌ கரியங்களுக்கு ஆளாகின்றனர்.

இதனால் யாழ். ஏ 9 வீதியில் அமைக்கப்பட்டுள்ள இராணுவச் சோதனைச் சாவடிகள் உடனடியாக அகற் றப்பட்டு, தமிழ் மக்கள் மீதான சோதனைகள் நிறுத்தப் படவேண்டும்.

இது தொடர்பான நடவடிக்கையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எடுக்க வேண்டும். இவ்வாறான சோதனைகள், இறக்கி ஏற்றல்கள் மூலம் உங்களால் தமிழ் மக்களின் மனங்களை வெல்ல முடியாது என் பதனைப் புரிந்து கொள்ளுங்கள்.

அத்துடன் யுத்தத்தில் பேரழிவைத் தமிழ் மக்கள் சந்தித்துள்ளனர். ஆனால் அவர்களுக்கான எந்தவித உயிரிழப்பு நஷ்டஈடுகளோ அல்லது பொருள் இழப்பு நஷ்ட ஈடுகளோ யுத்தம் முடிந்து 10 வருடங்கள் கடந்து விட்டபோதும் எந்த அரசாலும் வழங்கப்படவில்லை. அதற்கு மாறாக தம்மைக் கொல்ல வெளிநாடுகளிட மிருந்து அரசுகள் கொள்வனவு செய்த நவீன ஆயுதங் களுக்கான வரியையும் தமிழ் மக்கள் செலுத்த வேண் டியுள்ளது – என்றார். (ஐ)

# மகாவலி 'எல்' வலயம் என்னும் பெயரில் பல்லாயிரம் ஏக்கர் காணிகள் அபகரிப்பு

## ரவிகரன் குற்றச்சாட்டு



முல்லைத்தீவு, பெப். 08

மகாவலி 'எல்' வலயம் என்ற பெயரில் தமிழ் மக்களு டைய பல்லாயிரம் ஏக்கர் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன என வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தரவுகளைக் கொண்டு சுட்டிக்காட்டியுள் ளார்.

மகாவலி 'எல்' வலயம் தொடர்பாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்து தொடர்பாக முல்லைத்தீவு கள்ளப்பாட்டுப் பகுதியில் நேற்று முன்தி னம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற ஊடக சந்திப்பி லேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் –

நாடாளுமன்றத்தில் மகாவலி 'எல்' காணிகள் சம்பந்த மான கேள்விக்கு, பிரதமர் பதிலளித்த விதம் வேடிக்கையாக இருக்கின்றது.

நிச்சயமாக 1984ஆம் ஆண்டு எமது மக்கள் அங்கி ருந்து வெளியேற்றப்பட்டு மீளக் குடியமர்ந்தபோது அவர்கள் தமது வாழ்வாதாரத்துக்காக பாதுகாக்கப்பட்டிருந்த நிலங் கள் அவ்வளவும் அபகரிக்கப்பட்டிருந்தன.

குறிப்பாக அந்தக் காணிகள் தொடர்பான புள்ளி விவரங்கள் இருக்கின்றன. மொத்தமாக 3,744 ஏக்கர் காணிகள் அங்கு பறிக்கப்பட்டன. பிரதமர் தன்னுடைய உரையில் 408 ஏக்கர் காணி, அதுவும் 103 பேர் பயிர் செய்தனர் எனவும் சிங்கள மக்களுக்கு அவை பகிர்ந்தளிக் கப்படவில்லை என்றும் கூறினார். ஆனால் பின்னர் பகிர்ந்தளிக்கப்பட்டது போன்றும் கருத்துக் கூறினார்.

இவ்வாறிருக்க, நெலும்வெவ (உந்திராயன் குளம்) 264 ஏக்கர், ஆமையன்குளம் 360 ஏக்கர், அடையக்கறுத் தான் குளம் 75 ஏக்கர், சாம்பல்குள வயல் 300 ஏக்கர் என 899 ஏக்கர் நிலம் குளத்தோடு சம்பந்தப்பட்ட வயல் களாகும்.

இதில் 360 ஏக்கர் கொண்ட ஆமையன்குளத்தை 103 மில்லியன் ரூபாய்க்கு மேற்பட்ட நிதியில் புனரமைப்புச் செய்து முன்னைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அந்தக் குளத்தை கிரிவன்வெவ என்று பெயர் மாற்றம் செய்து சிங்கள மக்களிடம் கையளித்தமை யாவரும் அறிந்ததே.

இந்தக் குளத்தோடு உள்ள 360 ஏக்கர் குளத்தைத் தான் எமது மக்கள் விவசாயம் செய்துவந்த நிலையில், 900 ஏக்கர் நிலம் வரை காடுகளை அழித்தும் வேறு வளங்களை எடுத்தும் சிங்கள மக்களுக்குப் பகிர்ந்தளிக் கப்பட்டுள்ளன.

கிட்டத்தட்ட 3,744 ஏக்கர் காணியுடன் விஸ்தரிக்கப்பட்டு 11 ஆயிரத்து 232 ஏக்கர் காணிகள் மகாவலி 'எல்' என்ற பெயரில் அபகரிக்கப்பட்டுள்ளன என்பதுதான் உண்மை.

எனவே, பிரதமர் கூறிய கூற்றுப் பொய் என்பதை இப்போது சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குறித்த தமிழர்களின் காணிகள் யார் யாருக்கு, எத்தனை ஏக்கர் என்பதும், யார் யார் வாரிசாக இருக்கின்றார்கள் என்ற சகல தரவுகளும் எங்களிடம் உள்ளன. இந்நிலையில் இவ்வாறு காணிகளை அபகரிப்புச் செய்வதை விடுத்து தமிழர்களுடைய காணி களை தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டும் என்பதுதான் எமது கோரிக்கை – என்றார்.

நாடாளுமன்றத்தில் பிரதமருடனான கேள்வி நேரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் முல்லைத்தீவு மாவட்ட மகாவலி 'எல்' வலய வர்த்தமானி அறிவித்தல் குறித்து கேள்வி எழுப்பினார்.

குறிப்பாக மகாவலி 'எல்' வலயத்தில் உள்ள தமிழர் நிலங்கள் அபகரிக்கப்பட்டு அவை சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன எனவும், அந்தக் காணிகளை பிரதேச செயலகத்திடம் ஒப்படைக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை முன்வைத்துள்ள நிலையில் அது குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டினார் இது குறித்து பிரதமர் கவனம் செலுத்தித் தீர்வை பெற்றுக் கொடுக்க முடியுமா? எனக் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர், முல்லைத்தீவு மாவட்ட மகாவலி 'எல்' வலயத்தில் தமிழ் மக்களின் எந்தவொரு காணியும் சிங்கள மக்களுக்கு கொடுக்கப்படவில்லை என்றும் மகாவலி 'எல்' வலயத்தில் நீர்வழங்கல் திட்டத்துக் காக சுவீகரிக்கப்பட்ட நிலங்களுக்கு மாற்றீடான நிலங்கள் உரிய தமிழ் மக்களுக்கு வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

அத்துடன், தமிழ் மக்களின் பிரதிநிதிகளுடன் இது குறித்து கலந்துரையாடத் தயாராக இருப்பதாகவும் கூறி யிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஆணின் சடலம் மீட்பு

அம்பாறை, பெப். 08

அம்பாறை, திருக்கோவில் பகுதியின் பெரிய களப்பு தம்பட்டைப் பிரதேசத்தில் ஆண் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப் பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, திருக்கோவில் பகுதியைச் சேர்ந்த பாக்கியராசா தவராசா என்பவரே நேற்று வெள்ளிக்கிழமை சடலமாக கண் டெடுக்கப்பட்டார் எனப் பொலிஸார் குறிப் பிட்டனர்.

இது தொடர்பான மேலதிக விவரங்கள் தெரியவராத நிலையில் பொலிஸா ரால் விசாரணை முன்னெடுக்கப்பட்டு வரு கிறது. (ஐ)

## கொரோனா சந்தேகம்: 16 பேருக்குச் சிகிச்சை!

கொழும்பு, பெப். 08

கொரோனா தொற்றியதாகச் சந் தேகிக்கும் 16 நோயாளர்கள் நேற்று முன்தினம் வரை பல்வேறு வைத்தி யசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள் ளனர் என்று தொற்று நோய்ப் பிரிவு பிரதானி டாக்டர் சுதத் சமரவீர தெரி வித்தார்.

சந்தேகத்திற்கிடமான 16பேரில் மூவர் கொழும்பிலும், நால்வர் கண்டி யிலும், தலா இருவர் கராப்பிட்டிய, நீர்கொழும்பு, வைத்தியசாலைகளிலும் ராகம, கம்பஹா, பதுளை, யாழ்ப்பாணம், குருணாகல் வைத்தியசாலைகளில் தலா ஒருவரும் சிகிச்சை பெறுகின்றனர்.

தியத்தலாவ முகாமில் சிகிச்சை பெற்ற மாணவி பதுளை வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என வெளியான தவறான தகவலினால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

ஆனால் சீனாவில் கற்ற மொனரா கலை பகுதி மாணவியே இவ்வாறு அனுமதிக்கப்பட்டிருந்தார்.

# மிருகக் கழிவுகள் கொட்டப்படுவதற்கு எதிராக காக்கைதீவு மக்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், பெப். 08

காக்கைதீவு – அராலி வீதியில் நீண்ட காலமாக மிருகக் கழிவுகள் கொட்டப்பட்டு வருகின்றது. இதுதொடர்பில்யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு தெரியப்படுத்தியும் எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளாத நிலையில் மக்கள் நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

வசந்தபுரம் பகுதி மக்களால் இந்தப் போராட்டம் நேற்று வெள்ளிக்கிழமை காலை முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் கழிவகற்றும் உழவு இயந்திரங்கள் அனைத்தும் போராட்டக்காரர்களால் தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டன.

போராட்ட இடத்துக்கு வந்த யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர்கள் மற்றும் மாநகர சபையின் பொறியியலாளர்கள் இந்த விடயம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு போடப்பட்ட கழிவுகளை உடனடியாக அகற்றுவதாகவும் அவ்விடத்தில் சட்டவிரோதமாக குப்பைபோடுவரைக் கைதுசெய்வதற்காக உடனடியாகக் கண்காணிப்புக் கமரா பொருத்துவதாகவும் உறுதி வழங்கினர்.

அதனையடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் அவ்விடத்தை விட்டுச் சென்றனர்.



# ஷாபியின் வீட்டு சி.சி.ரி.வி. பதிவுகளை அழித்தது யார்?



கொழும்பு, பெப். 08

சட்டவிரோத கருத்தடை மற்றும் முறையற்ற விதத்தில் சொத்துக்கள் சேர்க்கப்பட்டதாகச் சிங்கள தீவிரவாத அமைப்புக்களால் குற்றம்சாட்டப்பட்ட பின்னர் கைது செய்யப்பட்டிருந்த வைத்தியர் ஷாபி சிஹாப்தீன், தனது இல்லத்தில் நிறுவப்பட்ட சி.சி.ரி.வி. கமரா அமைப்பிலிருந்து தரவை நீக்கியுள்ளார்.

இந்த விவகாரம் நேற்று நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டதையடுத்து, குருநாகல் பிரதம நீதிவான் சம்பத் , கண்காணிப்பு அமைப்பை அரச இரசாயன பகுப்பாய்வாளரிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

அவரது இல்லத்தில் நிறுவப்பட்ட சி.சி.ரி.வி. கமராக்கள் வைத்தியரால் கடந்த மாதம் 20 ஆம் திகதி சி.ஐ.டியிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும், கண்காணிப்புக் கமராவில் காட்சிகள் இல்லையென்றும், அதை வைத்தியர் அழித்தாரா அல்லது குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அழித்தனரா என்பதைக் கண்டறிய வேண்டும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளுக்காக அரச இரசாயனப் பகுப்பாய்வாளரிடம் அனுப்புமாறு குற்றவியல் புலனாய்வுத் துறை (சி.ஐ.டி.) அதிகாரிகள் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தனர்.

ஷாபி கைது செய்யப்பட்டபோது, வீட்டில் நிறுவப்பட்டிருந்த சி.சி.ரி.வி கமரா அமைப்பையும் குருநாகல் பொலிஸார் எடுத்துச் சென்றிருந்தனர். பின்னர், ஷாபி குற்றத்தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர், அந்தக் கண்காணிப்பு கமராவும் ஒப்படைக்கப்பட்டது.

எனினும், பின்னர் அந்த கண்காணிப்புக் கமரா வைத்தியரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டிருந்தது.

கடந்த வழக்கு தவணையின்போது, கமராவை மீள ஒப்படைக்க உத்தரவிடுமாறு சி.ஐ.டியினர் கோரியிருந்தனர். இதன்படி, கமராவை மீள ஒப்டைக்க நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. (ஐ)


விண்ணப்பதாரிகள் கட்டணங்களை தவணை முறையில் செலுத்த முடியும்.

எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புகளும், வாகனத்தொழில்நுட்ப வகுப்புக்களும் நடைபெறும்.

எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.

எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப்பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும். விரைவில் எழுத்துப்பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத்தரப்படும்.

THE SASIKA LEARNERS

முறைமையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.



வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும். (கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியினை மேற்கொள்ளலாம்)

சசிகா லேணர்ஸ்

அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

DS NO - 882

தலைமைக் காரியாலயம். இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
HOTLINE: 077 722 6247
0212217678,
0776140361
sasika Learners
sasika driving Schoolgmail.com.

கிளை நிறுவனங்கள்:

வேலணை
வங்களாவடிச் சந்தி, வேலணை
0212215472
0703013012

காரைநகர்
021 225 2454,
070 510 2484

கே.கே.எஸ். வீதி, மல்லாகம்
021224 3393
0703013014

பண்டத்தரிப்பு
021 225 2333,
071 255 4135

சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021225 1664
0703013016

யாழ்ப்பாணம் (Town)
இல.281 C, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(போதனா வைத்தியசாலை பின்புறமாக)
0212215472
0703013012

பருத்தித்துறை வீதி, நெல்லியடி
021 226 0999
071 775 0999

# போர் மூலம் பெறமுடியாத தனிநாட்டை பேனா ஊடாக பெற கூட்டமைப்பு முயற்சி

## கெஹலிய ரம்புக்வெல குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 08

யுத்தத்தின் ஊடாக பெற்றுக்கொள்ள முடியாமல் போன தனித் தாயகக் கோட்பாட்டைப் பேனாவின் ஊடாக பெற்றுக்கொள்ள கூட்டமைப்பு முயற்சிக்கிறது என அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் மக்களின் ஒரே பிரதிநிதியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மக்கள் ஏற்கவில்லை.

சம்பந்தன், சுமந்திரன் தமிழ் மக்களின் நாயகர் தான் என்று கூறுவார்களாயின் அது மிகப்பெரிய பொய். அவர்கள் அப்பாவி தமிழ் மக்களைத் தொடர்ந்து ஏமாற்றி வருகின்றனர்.

கடந்த 2004 - 2005 யுத்த காலப்பகுதியில் பிரபாகரனுக்கு ஆதரவாக நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பியவர்கள் இவர்கள்தான்.

அதாவது நாடாளுமன்றத்தில் இடம்பெறும் நிகழ்வுகளை பிரபாகரனுக்கு அப்போதே தெரியப்படுத்தும் விதமாக ஒலிப்பதிவு செய்தல் மற்றும் தொலைபேசியை அழைப்பை ஏற்படுத்தியவர்கள். இப்படியான சம்பவங்கள் இடம்பெற்ற நாடுதான் எமது நாடு.



யுத்தத்தின் ஊடாக பெற்றுக்கொள்ள முடியாமல் போன தனி தாயகக் கோட்பாட்டை பேனாவின் ஊடாகப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற எதிர்பார்ப்புடன் தற்போது செயற்படுகின்றனர்.

இதனால்தான் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இந்த நாட்டில் சிங்களம், தமிழ், முஸ்லிம் என அனைவரும் ஒன்றாக வாழ முடியும். என்றார்

அதாவது ஒரேநாடு, ஒரே கொள்கை என்ற கருத்துக் கமைய அனைவரும் செயற்பட வேண்டுமென்பதில் அவர் தெளிவாக இருக்கின்றார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில், நாமும் எங்கள் நிலையைப் பயன்படுத்தி வெற்றி பெறுவோமென இனவாதிகள் கூறினர். ஆனால் மக்கள் அனைவரும் நம்பிக்கை வைக்கக்கூடிய ஒரு தலைமை எங்களிடம் தான் இருந்தது.

மேலும் வாக்குகளுக்காக இனவாதிகளிடம் நாம் அடிப்பணியவில்லை. நாட்டின் மீதும் மக்கள் மீதும் எமக்கு எப்போதும் நம்பிக்கை இருக்கின்றது.

இதேவேளை பிரபாகரனினால் உருவாக்கப்பட்ட வடக்கு, கிழக்கில் காணப்படும் இனவாத அமைப்புகளினாலேயே அந்தப் பகுதியில் சஜித் பிரேமதாஸ வெற்றி பெற்றார்.

எனினும் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் இனவாதத்தை தோற்கடித்து, நாம் வெற்றி பெற்றோம். இதே போன்று எதிர்வரும் பொதுத் தேர்தலிலும் இனவாதிகளை முழுமையாக தோற்கடிப்பதற்கு மக்கள் அனைவரும் எம்முடன் இணைய வேண்டும் – என்றார். (ஐ)

## புத்தாண்டுக்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தல்

கொழும்பு, பெப். 08

தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் பொதுத்தேர்தல் நடைபெறுவதற்கான அறிகுறிகள் அரசியல் களத்தில் பிரகாசமாக தென்படுவதாக அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கடந்த புதன் நடைபெற்ற ஆளுங்கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலும் இது தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது என அறியமுடிகின்றது.

அத்துடன், ஈஸ்டர் தாக்குதல் நடத்தப்பட்டு எதிர்வரும் ஏப்ரல் 21 ஆம் திகதியன்று ஓராண்டு பூர்த்தியாகின்றது.

இந்நிலையில் ஏப்ரல் இறுதி வாரத்தில் பொதுத்தேர்தல் நடத்தப்படுமானால் அது ஏதேனும் ஒரு விதத்தில் தமது கட்சிக்குப் பின்னடைவை ஏற்படுத் தும் என்பதால் ஏப்ரல் முதல் வாரத்தில் தேர்தலை நடத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் பச்சைக்கொடி காட்டியுள்ளது என தெரியவருகின்றது.

அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தின்பிரகாரம் நான்கரை ஆண்டுகளுக்கு பின்னரே நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கு இருக்கின்றது.

எனினும், நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் தீர்மானமொன்றை நிறைவேற்றினால் முன்கூட்டியே கலைக்க முடியும் என்றும், இதன்பிரகாரம் அதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படலாம் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

இதன்படி இம்மாத இறுதிக்குள் நாடாளுமன்றம் கலைக்கப்படலாம் எனவும் அரசியல் களத்தில் பேசப்படுகின்றது.

## உலக சுகாதார நிறுவனத்தின் உபதலைவர் அனில் ஜாசிங்க

கொழும்பு, பெப். 08

உலக சுகாதார ஸ்தாபனத்தின் உப தலைவராக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அனில் ஜாசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போது சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி இந்தத் தகவலை வெளியிட்டார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், உலக சுகாதார நிறுவனத்தின் உப தலைவராக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அனில் ஜாசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். அதற்கு எமது மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்கின்றோம் – என்றார்.

## சுதந்திர தின நிகழ்வில் சந்திரிகா மஹிந்தவிடம் செய்த முறைப்பாடு!

கொழும்பு, பெப். 08

தேசிய சுதந்திர தின நிகழ்வில் கலந்து கொண்ட முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் நீண்ட நேரம் அளவளாவியமை குறித்து அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டது.

அப்படி என்னதான் சந்திரிகா மஹிந்தவுடன் பேசினார் என்று தேடிப் பார்த்ததில் கிடைத்த தகவல் இது.

இம்முறை தேசிய சுதந்திர தின விழா அழைப்பிதழ்கள் முன்னாள் ஜனாதிபதி மைத்திரி மற்றும் சந்திரிகா ஆகியோருக்கும் முன்னாள் பிரதமர் ரணிலுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

மைத்திரியும் ரணிலும் இந்த நிகழ்வுக்கு தங்களால் வரமுடியாதென முன்னதாகவே கடிதம் மூலம் ஏற்பாட்டாளர்களுக்கு அறிவித்துவிட்டனர். ஆனால் சந்திரிகா அம்மையார் வருகை தந்ததாலும் தமக்கு விடுக்கப்பட்ட அழைப்பு குறித்து அவர் அதிருப்தியுடன் பேசினார் எனத் தகவல்.

தமக்கு அனுப்பட்ட அழைப்பிதழில் தமது பெயரோ அல்லது பதவி நிலையோ எதுவும் குறிப்பிடப்படவில்லையென்றும் ஏற்பாட்டாளர்கள் இதனைப் பொறுப்புடன் செய்திருக்க வேண்டுமென்றும் சந்திரிகா ஆதங்கத்துடன் மஹிந்தவிடம் குறிப்பிட்டுள்ளார்.

அந்த விடயத்தை ஆர்வமாகக் கேட்ட மஹிந்த, அழைப்பிதழ் இறுதிநேரத்தில் அச்சிடப்பட்டு வந்திருந்தோ அல்லது தொழிநுட்பக் காரணங்களினாலோ அப்படி ஒரு தவறு நடந்திருக்கலாமென்றும் எவ்வாறாயினும் இது குறித்து ஏற்பாட்டாளர்களை அழைத்துக் கேட்கப்போவதாகவும் சந்திரிகாவிடம் உறுதியளித்துள்ளார்.

“இல்லை.. இல்லை.. இதைப் பெரிய பிரச்சினையாக்க வேண்டாம். அவர்கள் இதனை உணர்ந்து எதிர்காலத்தில் இப்படியான தவறைச் செய்யாமலிருந்தால் சரி” – என்று சந்திரிகா மஹிந்தவிடம் கூறினார் என அறியமுடிந்தது.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.02.2020 இல் வெளியிடப்பெற்றது.